இனி இது ரகசியம் அல்ல!

யாழ்.மாநகர சபையில் அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் நேற்றுத் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றது.

வழமையாக நாடாளுமன்றத்தில் ஆட்சியில் இருக்கும் அரசின் வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் பக்கம் 02

பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kālaikathir

விழயல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 13 வெள்ளிக்கிழமை 29.11.2019 கதிர் 24

# ஜெனீவாத் தீர்மானத்தை புதிய அரசு நிராகரிக்கும்!

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவிப்பு



கொழும்பு, நவ. 29

ஜெனீவா மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கிக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை நிராகரிக்கும் நடவடிக்கைகளைத் தற்போது பதவியேற்றுள்ள புதிய அரசு முன்னெடுக்கவுள்ளதாகச் சர்வதேச ஒத்துழைப்பு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவித்தார். பக்கம் 03

## மாலைதீவு முன்னாள் அதிபருக்கு ஐந்து வருடச் சிறைத் தண்டனை



மாலே,நவ.29

மாலைத்தீவு முன்னாள் ஜனாதிபதி அப்துல்லா யமீனுக்கு 5 வருடசிறைத்தண்டனை வழங்கி அந்நாட்டு நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது.

நிதி பக்கம் 03

## புதுடில்லியில் கோட்டாவுக்கு நேற்றுத் தடல்புடல் வரவேற்பு







புதுடில்லி,நவ. 29

இரண்டுநாள் உத்தியோகபூர்வ பயணத்தைமேற்கொண்டு இந்தியா பயணமான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்றுப் பிற்பகல் புதுடில்லியைச்சென்றடைந்தார்.

இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில் ஜனாதிபதி உள்ளிட்ட இலங்கைத் தூதுக் குழுவினரை இந்திய அரசபோக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி வி.கே.சிங் வரவேற்றார். பக்கம் 03

## கோட்டாவை எதிர்த்து ஆர்ப்பாட்டம் புதுடில்லியில் நேற்று வைகோ கைது



புதுடில்லி,நவ.29

இலங்கை ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷவின் புதுடில்லி வருகையை கண்டித்து டில்லியில் ம.தி.மு.க. கட்சியினருடன் போராட்டத்தில் பக்கம் 03

## பொதுத்தேர்தல் குறித்து ஆராய்வதற்கு கட்சிகளுக்கு ஆணைக்குழு அழைப்பு

கொழும்பு, நவ. 29

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான முன் ஆயத்த கூட்டத்துக்குக் கட்சிகளின் பொதுச் செயலாளர்களைத் தேர்தல்கள் ஆணைக்குழு அழைத்துள்ளது.

இந்தக் கூட்டம் எதிர்வரும்4ஆம்திகதி4புதன்கிழமை தேர்தல்கள்செயலகத்தில்இடம்பெறும்என அறிவிக்கப்பட்டுள்ளதுஇ

## 80 கிலோ கஞ்சாவுடன் இருவர் நெடுந்தீவுக் கடலில் சிக்கினர்

யாழ்ப்பாணம், நவ.29

இந்தியாவில்இருந்து இலங்கைக்குக் கடத்தவிருந்த 80 கிலோ கஞ்சாப்பொதிகளை, நெடுந்தீவுக்கடற்பரப்பில்நேற்று முன்தினம் கடற்படையினர் மீட்டுள்ளனர்.

இதன்போது, மன்னார் பக்கம் 03

## என்னைத் துப்பாக்கி காட்டி மிரட்டினர் ராணுவத்தினர்!

### சிவாஜிலிங்கம் பரபரப்புக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 29

வடமராட்சியில் இராணுவக் காவலரணுக்கு அண்மையில் அனுஷ்டிக்கப்பட்ட மாவீரர் தின நிகழ்வில் இராணுவத்தினர்துப்பாக்கிகளைலோட் செய்து சுடத் தயா ராக உள்ளனர் எனக் கூறி என்னைமிரட்டியமையுடன் டைன்புலிக்கொடிவைத் திருக் பக்கம் 03

## ஜனாதிபதியின் பெயரை பயன்படுத்தி மோசடிகள்

கொழும்பு, நவ. 29

சலுகைகளைப் பெறும் நோக்கில் ஜனாதிபதியின் பெயரை பயன்படுத்துவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

மோசடியில் ஈடுபட்டுவரும் சில தனிநபர்கள் மற்றும் குழுக்கள் தமக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் நெருங்கிய தொடர்பு இருப்பதாகத் தெரிவித்து, மக்களை ஏமாற்றித் தவறாக பக்கம் 03

## யாழ்.மாநகர சபையின் பட்ஜெட் தோற்கடிப்பு !

### ஈ.பி.டி.பி., முன்னணி எதிர்த்து வாக்களிப்பு


யாழ்ப்பாணம், நவ. 29

யாழ்ப்பாணம் மாநகரசபையின் 2020ஆம் ஆண்டுக்கான வரவு– செலவுத்திட்டம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எதிர்ப்பால் தோற்கடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்றுக் காலை முதல்வர் பக்கம் 03

## கனடாவில் இருந்து கொழும்பு வந்த தமிழர் கடத்தப்பட்டுப் படுகொலை

### புத்தளத்தில் தண்டவாளத்தில் சடலம்



கனடாவில் இருந்து கொழும்பு திரும்பிய தம்பிராஜா அம்பலவாணர் என்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர் நேற்று முன்தினம் வெள்ளவத்தையில் பக்கம் 03

## பிரதி அமைச்சர்களான மூன்று பேரும் நேற்று ராஜாங்க அமைச்சர்களாகினர்!

கொழும்பு, நவ. 29

இடைக்கால அரசில் பிரதி அமைச்சர்களாக நேற்று முன்தினம் நியமனம் வழங்கப்பட்ட மூவர் நேற்று இராஜாங்க அமைச்சர்களாகப் பதவியேற்றுள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் அவர்கள் மூவரும் நேற்றுக் காலை பதவியேற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நிமல் லன்சா – சமூக வலுவூட்டல் இரா பக்கம் 03

## திருமலைப் படகு விபத்தில் மீனவர் ஒருவர் உயிரிழப்பு

திருகோணமலை,நவ.29

திருகோணமலை, உப்புவெளி கடல் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற படகு விபத்தில் மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சாமபலத்வு பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 29 வயதுடைய டி.அகிலராஜ் எனும் மீனவரே உயிழந்துள்ளார். இவரது சடலம், பக்கம் 03

# இலங்கை ஜனாதிபதி கோட்டாவுக்கு எதிராக கறுப்புக் கொடி ஏந்திப் போராட்டம் எதற்காக?

## புதுடில்லியில் கைதாக முன்னர் வைகோ விளக்கம்



இலங்கை ஜனாதிபதியாக வெற்றிபெற்றபின் கோட்டாபய ராஜபக்ஷ முதல் அரசுமுறைப் பயணமாக இந்திய சென்றுள்ள நிலையில் அவருக்கு எதிர்ப்பு தெரிவித்து, அவரைத் தமிழினப் படுகொலையின் முக்கியகொலை யாளிஎன உலகத்தின்கவனத்தை ஈர்க்கும் வண்ணம் இந்தியதலை நகர் புதுடில்லியில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ எம்.பி. தலைமையில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நேற்று நடை பெற்றது. இதில் அக்கட்சியின் மற்றொரு எம்.பியான கணே சமூர்த்தியும் மற்றும் துணைப் பொதுச்செயலாளர் மல்லை சத்தியா உட்பட நூற்றுக்கணக்கான கட்சியினர் மற்றும் தமிழுணர்வா ளர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவரும் டில்லி காவல்துறையால் கைதுசெய்யப் பட்டுள்ளனர் என இந்திய ஊட கங்கள் தெரிவித்தன.

அங்கு பேசிய வைகோ எதற் காக இந்தக் கறுப்புக் கொடி ஆர்ப் பாட்டம் எனும்

விளக்கத்தை பன்னாட்டு ஊடகங்களுக்கு வெளிப்படுத்தி யிருந்தார். அவர் அப்போது கூறி யவை வருமாறு:–

இலங்கை ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ முன்பு பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்த போது ஈழத்தமிழர்களை இனப்படுகொலை செய்த குற்ற வாளி ஆவார்.

அப்போது அவரது சகோதரர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி யாக இருந்தார். அவர்தான் இனப் படுகொலைக்கு உத்தரவு பிறப்பித் தார்.

2014ஆம் ஆண்டு நரேந்திர மோடி இந்தியப் பிரதமராகப் பதவி ஏற்ற விழாவிற்கு, மஹிந்த ராஜ பக்ஷவுக்கு அழைப்பு விடுத்து இருந்தார்.

அதை எதிர்த்து நாங்கள், மறுமலர்ச்சி திராவிட முன்னேற் றக் கழகம், இதே நாடாளுமன்ற வீதியில் கறுப்புக்கொடி ஆர்ப் பாட்டம் நடத்திக் கைதானோம்.

ஈழத்தமிழர் படுகொலை குறித் துத்துளி அளவும் கவலை இன்றி, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கைக்குச் சென்று கோட்டாபய ராஜபக் ஷவை, இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்து இருக்கின்றார்.

இது, ஈழத்தமிழர்களின் நெஞ் சங்களில் எரிகின்ற தீயில், மேலும் பெட்ரோல் ஊற்றுகின்ற செயல் ஆகும்.

ஐ.நா. மன்றம் அளித்துள்ள ஆய்வு அறிக்கையின்படி, 2009 ஆம் ஆண்டுமட்டும் ஒரு லட்சத்து 37 ஆயிரம் ஈழத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ள னர்.

எங்களுடைய தாய்மார் க ளும் சகோதரிகளும் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப் பட்டுப் படுகொலை செய்யப்பட்ட னர். குழந்தைகளையும் விட்டு வைக்கவில்லை. மருத்துவ மனைகள் மீது இலங்கை வான் படை குண்டுகளை வீசியது; தரைப்படை பீரங்கித் தாக்குதல் நடத்தியது. படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டு இருந்தவர்கள் கொல லப்பட்டார்கள்.

பள்ளிக் கட்டடங்களை இடித் துத் தகர்த்தார்கள்.

அண்மையில் நடைபெற்று முடிந்த தேர்தலில், ஈழத் தமிழர் கள் சஜித் பிரேமதாஸாவுக்கு ஆதரவாக வாக்கு அளித்து இருக் கின்றனர். எனவே, நான் சிங்கள மக்களின் ஆதரவால்தான் வெற்றி பெற்றேன் என்று கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்தார்.

பதவி ஏற்றவுடன் முதல் வேலையாக அவர் பிறப்பித்த உத்தரவில், ஈழத்தமிழர்கள் வசிக் கின்ற தெருக்களில் இலங்கை இராணுவம் துப்பாக்கி ஏந்தி வலம் வர வேண்டும் என அறிவித்து இருக்கின்றார்.

ஏற்கனவே ஈழத் தமிழர்கள் வசிக்கின்ற பகுதிகள், சிங்கள இராணுவத்தின் சித்திரவதைக் கூடமாக, கொலைக்களமாக ஆக்கப்பட்டு இருக்கின்றது.

2008ஆம் ஆண்டு, 'த சண் டேலீடர்' என்ற ஆங்கில ஏட்டின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டமை யை அனைவரும் அறிவர்.

தான் இறப்பதற்கு முன்பு அவர் எழுதிய தலையங்கத்தில், மஹிந்த ராஜபக்ஷவால் நான் கொல்லப்படுவேன் என்று எழுதி இருந்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ நிகழ்த் திய படுகொலைகள் குறித்து விசாரிப்பதற்காக நிஷாந்த சில்வா என்ற அதிகாரி நியமிக்கப்பட்டு இருந்தார்.

அவர் அந்தப் பொறுப்பில் இருந்து இடமாற்றம் செய்யப்பட் டார். எனவே அவர் காவல்துறை ஆணையத்தையும் நீதிமன்றத் தையும் அணுகி அதே பொறுப் பில் நீடித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷகுடிய ரசுத் தலைவராகப் பொறுப்பு ஏற்ற பிறகு, நிஷாந்த சில்வா, அவ ரது மனைவி, மூன்று பெண் பிள்ளைகள் இலங்கையை விட்டு வெளியேறி விட்டனர். இப்போது அவர்கள் எங்கே இருக்கின்றார் கள் என்பது யாருக்கும் தெரிய வில்லை.

இலங்கையில் உள்ள சுவிட் சர்லாந்து நாட்டுத் தூதரகத்தின் ஒரு பெண் அதிகாரி, கோட்டாபய ராஜபக்ஷவின் வெள்ளை வான் குண்டர்களால் கடத்தப்பட்டு இருக்கின்றார்.

ஈழத்தமிழர்கள் இனப் இனப் படுகொலையின்போது இந்த வெள்ளை வான் ஒரு கொலைக் கருவியாகச் செயல்பட்டது. அந் தப் பெண் அதிகாரி எங்கோ ஓரிடத்தில் விசாரிக்கப்படுவதாக நியூயார்க் டைம்ஸ் ஏடு எழுதி இருக்கின்றது.

உலகப் புகழ்பெற்ற ராய்ட்டர் செய்தி நிறுவனம், தங்களுடைய செய்தியாளர்களை இலங்கை யில் இருந்து திரும்பப் பெற்றுக் கொண்டுவிட்டது.

கோட்டாபய ராஜபக்ஷவின் மிரட்டலால், தினப்புயல், தமிழர் தளம் ஆகிய இரண்டு தமிழ் ஏடுகள் நிறுத்தப்பட்டுவிட்டன.

அது மட்டும் அல்ல.

லைட் ஹவுஸ் என்ற, சிங்கள, ஆங்கிலம், தமிழ் செய்தித்தாள் களை வெளியிடுகின்ற, இலங்கை யின் பெரிய செய்தி நிறுவனம், தமிழ் செய்தித்தாள்களை நிறுத்து வதாக அறிவித்து விட்டது.

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகின்றார்கள். கடந்த 30 ஆண்டுகளில் 580 தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல் லப்பட்டு இருக்கின்றார்கள். அவர்களுடைய படகுகளைப் பறிமுதல் செய்து, பிடிபட்ட மீன வர்களை இலங்கைச் சிறைகளில் அடைத்துள்ளனர்.

ஆனால், இலங்கை அர சாங்கத்தோடு நரேந்திர மோடி அரசு கொஞ்சிக் குலாவுகின்றது.

இது தமிழர்களுக்கு எதிரான அநீதி ஆகும்.

இப்போது இலங்கையில் உள்ள ஈழத்தமிழர்கள் மிரட்ட லுக்கும் அச்சத்திற்கும் வேதனைக் கும் ஆளாகி இருக்கின்றனர்.

அவர்களுடைய துயரத்தை உலகுக்கு எடுத்து உரைக்கவும், கொடிய கோட்டாபய ராஜபக் ஷவை இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்த இந்திய அர சாங்கத்தைக் கண்டிக்கவும் நாங் கள் இந்தக் கருப்புக்கொடி அறப்போர் ஆர்ப்பாட்டத்தை நடத் திக் கொண்டு இருக்கின்றோம்.

எங்களுடைய முதன்மை யான கோரிக்கை: ஈழத் தமிழர் களை இனப்படுகொலை செய்த குற்றவாளிகளை, பன்னாட்டு நீதிமன்றத்தின் குற்றக் கூண்டில் நிறுத்தித் தண்டிக்க வேண்டும்.

90 ஆயிரம் ஈழத் தமிழ்ப் பெண்கள் இப்போது விதவைகளா கக் கண்ணீர் சிந்துகின்றனர். காணாமல்போன பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் குறித்து எந்தத் தகவலும் இல்லை.

எனவே ஐ.நா. மன்றம், மனித உரிமைகள் ஆணையம், தமிழ் ஈழம் அமைப்பதற்காக, ஈழத் தமிழர்கள் இடையே ஒரு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

உலகின் பல்வேறு நாடுகளில் வாழ்கின்ற ஈழத் தமிழர்கள் அனைவரும், அந்தப் பொது வாக்கெடுப்பில் வாக்கு அளிக்க வகை செய்ய வேண்டும்.– என கூறியுள்ளார்.



## குழந்தை பெற்ற 6 ஆவது நாள் சடலமாக மீட்கப்பட்ட தாய்!

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ்ப்பாணத்தில், ஆறு நாள் களுக்கு முன்னர், பெண் குழந் தையை பிரசவித்த தாய் அவரது வீட்டின் சமையலறையிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியைச் சேர்ந்த சுரேந்திரன் குமுதினி (வயது – 34) எனும் ஒரு பிள்ளையின் தாயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம் பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண் டுள்ளனர். (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அரசு கவிழ்ந்ததாக அர்த்தம்.

அப்படியானால் யாழ். மாநகர சபையில் வரவு – செலவுத் திட்டம் நேற்றுத் தோற்கடிக்கப்பட்டமை யால் முதல்வர் ஆர்னோல்ட்டுக் குப் பாதிப்பு இல்லையா என்று கேட்டால் இல்லை என்பதுதான் பதில்.

இப்போது இந்த வரவு –செல வுத் திட்டத்தை மீண்டும் பதி னான்கு நாள்களுக்குள் அச்சபை யில் சமர்ப்பிக்க வேண்டும்.

அப்போதும் அது தோற் கடிக்கப்பட்டாலும் கூட சபை முதல் வருக்கோ, சபைக்கோ ஆபத்து ஏதுமில்லை.

உள்ளூராட்சி சபை ஒன்றில் அப்படி முதல் தடவை தோற்கடிக் கப்பட்ட வரவு – செலவுத் திட்டம் ஒன்று பதினான்கு நாள்களுக் குள் மீண்டும் சமர்ப்பிக்கப்படும் போது திரும்பவும் தோற்கடிக்கப்பட் டால் கூடஅதனை அங்கீகரிக் கப்பட்ட வரவு –செலவுத் திட்ட மாகக் கருதவேண்டும் என்கிறது உள்ளூராட்சிச் சட்டங்கள்.

ஆனால், ஓர் உள்ளூராட்சி சபையின் தலைவர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டு இரண்டு வரு டங்கள் முடிவடைந்த பின்னர் அந்தத் தலைவர் சமர்ப்பிக்கும் இத்தகைய வரவு – செலவுத் திட்டம் இப்படி அடுத்தடுத்து பதி னான்கு நாள்களுக்குள் இரண்டு தடவைகள் தோற்கடிக்கப்பட் டால் அந்தத் தலைவர், அத்தலை வர் பதவியை இழந்தவராவர் என்கின்றது அச்சட்டம்.

யாழ். மாநகர சபையைப் பொறுத்தவரை அதற்கான தேர் தல் நடைபெற்று இன்னும் இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாக வில்லை. அடுத்த ஆண்டு முற் பகுதியில்தான் இரண்டு ஆண்டு கள் பூர்த்தியாகின்றன.

ஆகவே இந்த முறை வரவு –செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட் டமையாலோ, அல்லது அடுத்த பதினான்கு நாள்களில் மீண்டும் அது சபையில் சமர்ப்பிக்கப்படும் போது திரும்பவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஈ.பி.டி.பி.யுடன் சேர்ந்து அதைத் தோற்கடித் தாலோ எந்தவித பெரிய மாற் றங்களும் வந்துவிடப்போவ தில்லை.

ஆனால் 2021 ஆம் ஆண் டுக்கான வரவு – செலவுத் திட்டம் அடுத்த ஆண்டு 2020 பிற்பகுதி யில் – இப்படி சமர்ப்பிக்கப்படும் போது அது தோற்கடிக்கப்படு மானால் தமிழ்க் கூட்டமைப்பின் பிரதிநிதியான ஆர்னோல்ட் தலை மையிலான கூட்டமைப்பின் தலைமைப் பதவி யாழ்.மாநகர சபையில் பறிபோகும். திரும்பவும் மேயர் பதவிக்கான பதவிப் போட்டியில் குதிக்கவேண்டிய கட்டாய நிலைமை கூட்டமைப் புக்கு ஏற்படும்.

ஓர் உள்ளூராட்சி சபையில் அதன் அங்கத்தவரகள் மத்தி யில் பெரும்பான்மை ஆதரவு இல்லாவிட்டாலும், ஏதோ ஒரு வகையில் ஓர் உறுப்பினர் அந்த சபையின் தலைவராக (மேயராக அல்லது தவிசாளராக) தெரிவு செய்யப்பட்டு விட்டால் சபையின் பெரும்பான்மையினரின் ஆத ரவின்றியே சுமார இரண்டு வருட காலத்துக்கு அவர் அப்படி சபை யைக் கொண்டிழுக்கும் வாய்ப்பு இப்படிச் சட்டத்தால் வழங்கப் பட்டுள்ளது.

ஆனால் இத்தகைய சகா யத்தை வைத்துக்கொண்டு, பெரும்பான்மையினரின் ஆத ரவின்றியே இரண்டு வருடங்க ளுக்கு மேல் காலத்தை ஓட்டுவ தற்கு சட்டம் இடமளிக்கவில்லை என்பதுதான் நிலைமை.

ஆக, இன்றைய நிலையில யாழ். மேயர் ஆர்னோல்டின் தலைமைக்கு ஆபத்து ஏது மில்லை. எதிரணியில் இருக்கும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி யும் ஈ.பி.டி.பி.யும் நேற்று சபை யில் தங்கள் கூட்டுக்கு உள்ள ஆதரவு யாது என்பதை நிரூபித்தி ருக்கின்றன.

எதிர்வரும் காலங்களில் இக் கூட்டு ஆர்னோல்ட் தரப்புக்கு – தமிழ்த் தேசிய கூட்டமைப்புத் தரப்புக்கு – நெருக்கடி தரும் என் பது மட்டும் நிச்சயம்.

முதல்வர் ஆர்னோல்ட் தரப்பு இப்போதே எச்சரிக்கையாகிக் கொள்வது நல்லது. இல்லை யேல் அடுத்த ஆண்டு நவம்பரில் புதிய மாநகர சபை முதல்வரை நாம் தேடவேண்டி நேர்ந்துவிடும்.

– மின்னல்–

# எங்களுக்குத் தலைவர்கள் பிரபாகரனும் சம்பந்தனுமே

## கல்முனை மாநகர சபை உறுப்பினர் பரபரப்புப் பேச்சு

மட்டக்களப்பு, நவ. 29

எங்களுக்குத் தலைவர் எவரும் சபையில் இல்லை. தலைவர்கள் என்றால் பிரபாகரனும் சம்பந்தனும்தான் என்றும் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபையின் மாதாந்த கூட்ட அமர்வு நேற்று வியாழக்கிழமை கல்முனை நகர மண்டபத்தில் முதல்வர் மூத்த சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நடைபெற்றது.

சபை அமர்வில், அண்மையில் சபையில் பாதீடு நிறைவேற்றப்பட்ட பின்னர் அது தொடர்பில் முன் எடுத்துக்கொள்ளப்பட்ட கூட்டறிக்கை தொடர்பாக உறுப்பினர்களிடையே இடம்பெற்ற வாதப் பிரதிவாதங்களிடையே முதல்வர் தெரிவித்த கருத்துக்கு மறுதலித்துப் பேசிய மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன், –

எங்களுக்கு இங்கு தலைவர் எவரும் இல்லை. தலைவர் என்று சொன்னால் பிரபாகரன் அடுத்த தலைவர் சம்பந்தன் ஐயா முதல்வரே! இங்கு சபைக்கு எவரும் எங்களுக்கு தலைவர் கிடையாது என கூற விரும்புகின்றேன் என்று தெரிவித்தார். –(ஐ)

# அரசியல் பழிவாங்கல்கள் குறித்து ஆராய்வதற்கு விசேட ஆணைக்குழு

## ஆறு வார காலத்துக்குள் அரசு அமைக்குமாம்

கொழும்பு,நவ.29

அரசியல் பழிவாங்கல்களுக்கு இலக்கான அரச ஊழியர்கள் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விசேட ஆணைக்குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளார் என அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

இதனூடாக அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து ஆராயப்பட்டு தேவையான நிவாரண நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவுகளை அறிவிக்கும் முதலாவது ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அரச அதிகாரிகள் எடுத்த முடிவுகள் தொடர்பில் அவர்களுக்குச் சிறை செல்லும் நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் அவர்களைப் பாதுகாக்கும் வகையில் விசேட சட்டம் கொண்டுவருவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் இடம்பெற்ற பல்வேறு அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக, எதிர்வரும் ஆறு வார காலத்தினுள் இந்த ஆணைக் குழு நியமிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### ஜெனீவாத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவிவகார அமைச்சில் நேற்றுச் சர்வதேச ஒத்துழைப்பு இராஜாங்க அமைச்சராகக் கடமையைப் பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–எமது அரசின் சர்வதேசக் கொள்கைகள் எவ்வாறானவை என்பதை ஜனாதிபதி தெளிவாகக் கூறியுள்ளார். இந்தச் சந்தர்ப்பம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அரசுக்கும் சவால் நிறைந்த தருணமாக இருக்கும் எனக் கருதுகின்றோம்.

சர்வதேச விவகாரங்களில் நாம் கவனமாகப் பயணிக்க வேண்டியுள்ளது. எமது சர்வதேசக் கொள்கையானது சர்வதேசத்துடன் பிளவுபடாத கொள்கையாகும்.

அதேபோல் எந்தச் சர்வதேச சக்திக்கும் சாயாது சுயாதீனமான நாடாகவும், எந்தவொரு நாட்டுக்கும் எமது உள்ளக விவகாரங்களில் தலையிட முடியாத வகையிலும் செயற்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம். சகல நாடுகளுடனும் நட்புறவு ரீதியில் பயணிக்க வேண்டும்–என்றார்.

இதேவேளை, கடந்த சில தினங்களுக்கு முன்னர் கருத்து தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன, ஜெனீவா மனித உரிமைகள் சபையினால் கடந்த 2015 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 30/01 பிரேரணையை ராஜபக்ஷ அரசு மீளாய்வு செய்யும் எனக் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### புதுடில்லியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரஞ்சித் சிங் சந்து உள்ளிட்டோர் அங்கு வருகை தந்திருந்தனர்.

வரவேற்பு நிகழ்வு பல்வேறு கலாசார அம்சங்களுடன் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பையேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவுக்கான இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், பிரதமர் மோடி, வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் உள்ளிட்டோரை தனித்தனியாக சந்தித்து இருநாடுகளுக்கு இடையிலான நல்லுறவுகளை மேம்படுத்துவது தொடர்பாக ஆலோசனை நடத்தவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி ஏனைய இந்திய பிரமுகர்கள் பலரைச் சந்திக்கவுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி பீ.பி.ஜயசுந்தர, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ரவிநாத் ஆரியசிங்க, திறைசேரி செயலாளர் சஜித் ஆட்டிகல, ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்க மற்றும் ஜனாதிபதியின் தனிப்பட்ட செயலாளர் சுகீஸ்வர பண்டார ஆகியோரும் ஜனாதிபதியின் இந்தப் பயணத்தில் இணைந்துள்ளனர். (ஐ)

### என்னைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றோமா என்றும் எமது கொடிகளைப் புரட்டிப் பார்த்தனர் என வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

நல்லூரில் அமைந்துள்ள யாழ்.பாடி விருந்தினர் விடுதியில் அவர் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த ஆட்சி மாற்றத்தில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகி உள்ளார்.

இவர் ஜனாதிபதியாக வந்துவிட்டார் என்பதற்காகத் தமிழ் மக்கள் எமது இன விடுதலைக்குப் போராடி இன்னுயிர்களைத் தியாகம் செய்த மாவீரர் செல்வங்களை நினைவு கூராது பயந்து ஒதுங்க வேண்டாம். நாம் இம்முறை பயந்து ஒதுக்கினால் இனிவரும் காலங்களில் நாம் மாவீரர்களை நினைவு கூரமுடியாது. எனவே மக்கள் ஒற்றுமையாக துணிந்து அமைதியான முறையில் நாம் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்க முன்வர வேண்டும் என அழைப்பு விடுத்திருந்தேன்.

இந்நிலையில் வடக்கு–கிழக்கு தாயகம் எங்கும் மாவீரர் தினம் மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

அந்த வகையில் நானும் காலையிலேயே மக்களின் அச்சத்தை போக்க நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினவுத்தூபியில் அஞ்சலி செலுத்த ஆரம்பித்து யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் பிடியில் உள்ள மூன்று முக்கிய துயிலும் இல்லங்களுக்கு அண்மையில் அஞ்சலி நிகழ்வுகளை நடத்தினேன்.

அதில் கொடிகாமத்தில் இராணுவத்தினர் பல இடஞ்சல்களைத் தந்தனர். மேலும் வடமராட்சி எள்ளங்குளத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்துக்கு அண்மையில் நாம் நினைவு தினத்தை முன்னெடுத்தபோது எம்மைச் சுற்றி நின்ற இராணுவத்தினர் தங்களின் துப்பாக்கிகளை லோட் செய்து என்னுடன் நின்றவர்களை அச்சுறுத்தும் பாணியில் செயற்பட்டனர்.

நாம் வைத்திருந்த கொடிகளைச் சோதனையிட்ட இராணுவ அதிகாரி புலிக் கொடி வைத்திருக்கின்றீர்களா என்றும் கேட்டு விசாரணை செய்தார்.

இவ்வாறான சில கெடுபிடிகள் – அச்ச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் தமிழ் மக்கள் ஆகிய நாம் பொறுமையுடனும் உணர்வுபூர்வமாகவும் மாவீரர் தினத்தை அனுஷ்டித்தோம்–என்றார். (ஐ)

### கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

வெள்ளவத்தையில் வைத்து கடத்தப்பட்ட அவரது சடலம் புத்தளத்தில் ரயில் தண்டவாளங்களுக்கு இடையில் போடப்பட்டிருந்தது. சித்திரவதை செய்யப்பட்ட காயங்கள் அவரது உடலில் காணப்பட்டன என அவரது உறவினர்கள் தெரிவிக்கின்றார்கள். கொலைக்கான காரணமும் இதுவரை தெரியவில்லை.

### கோட்டாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்ட வைகோ கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாழ்த்து தெரிவித்த பிரதமர் மோடி, இந்தியா வருமாறு அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பை ஏற்று 3 நாள்கள் அரசு முறைப்பயணமாக கோட்டாபய ராஜபக்ஷ நேற்று இந்தியா சென்றடைந்தார்.

அவரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து டில்லியில், ம.தி.மு.க. சார்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ தலைமையில் ஆர்பாட்டம் நடைபெற்றது.

டில்லி ஜந்தர்மந்தர் பகுதியில் திரண்ட ம.தி.மு.கவினர் கோட்டபாயவின் இந்தியா வருவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கோஷங்களை எழுப்பினர். இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட வைகோவை டெல்லி பொலிஸார் கைது செய்து அழைத்துச் சென்றனர்.

### யாழ்.மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்மானுவேல் ஆனல்ட் தலைமையில் நடைபெற்றது.

2020ஆம் ஆண்டுக்கான வரவு– செலவுத் திட்டம் சபையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. அதற்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மாத்திரமே ஆதரவு வழங்கினார்கள். அதனால் குறித்த வரவு–செலவு திட்டத்துக்கு 16 பேர் வாக்களித்தனர்.

ஈழமக்கள் ஜனநாயக கட்சி மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த 21 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர்.

அதனால் யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு– செலவுத் திட்டம் 5 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

இதேவேளை, நேற்றைய அமர்வில் 7 உறுப்பினர்கள் சமுகமளிக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ–07)

### திருமலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு மீன்பிடிப்பதற்காகக் கடலுக்குச் சென்ற மீன்பிடிப்படகு ஒன்று நேற்றுக் காலை கரை திரும்பிக் கொண்டிருந்தபோது, கடல் கொந்தளிப்பினால் கவிழ்ந்துள்ளது.

இதனையடுத்து, மற்றைய படகுக்கு பாய்ந்த வேளை மீனவர் ஒருவர், தவறிக் கீழே விழுந்தார் எனவும் அப்போது படகில் பொருத்தப்பட்டிருந்த இன்ஜின் வெட்டியதால் அவர் உயிரிழந்தார் என்றும் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### மாலைதீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோசடி தொடர்பான வழக்கின் விசாரணையிலேயே அவருக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

அவரது ஆட்சிக் காலத்தில் ஹோட்டல் அபிவிருத்திக்காகத் தீவுகள் பலவற்றை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு குத்தகைக்கு விட்டதன் ஊடாக ஒரு மில்லியன் அமெரிக்க டொலரைவர் மோசடி செய்துள்ளார் எனத் தெரிவித்து தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது.

### 80 கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கடற்படையினர் தெரிவித்தனர்.

நெடுந்தீவு மேற்குக் கடற்பரப்பில், சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த படகொன்றைச் சோதனைக்குட்படுத்திய போதே, அதிலிருந்து 80 கிலோ கஞ்சா பொதிகளைக் கடற்படையினர் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட கஞ்சா பொதிகள் 50 லட்சம் ரூபாவுக்கும் அதிகம் பெறுமதியுடையதெனவும் கடற்படையினர் கூறினர்.

கைது செய்யப்பட்டவர்கள், கஞ்சாப் பொதிகளுடன் நெடுந்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

### பிரதி அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜாங்க அமைச்சர்

காஞ்சன விஜேசேகர – தேயிலை தொழில்துறை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

இந்திக்க அநுருத்த – வீட்டு வசதித்துறை இராஜாங்க அமைச்சர்

இதன்மூலம் இடைக்கால அரசில் 15 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களும் 38 இராஜாங்க அமைச்சர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

### ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சலுகைகளைப் பெற்றுக் கொள்ள முயற்சித்து வருகின்றனர் எனச் சாட்சிகளுடன் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

பல்வேறு பதவிகள், நியமனங்கள், கேள்வி கோரல்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொடுக்க உதவ முடியும் என அவர்கள் மக்களுக்குத் தெரிவித்து வருகின்றனர்.

இவர்களில் சிலர் ஜனாதிபதிக்கு தங்களால் அழுத்தம் கொடுக்க முடியுமென்றும் தெரிவித்துள்ளனர் என அறியக் கிடைத்துள்ளது.

எப்போதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமைகள் மற்றும் நடைமுறைகளுக்கேற்ப செயற்படுவதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உறுதியான கொள்கையாகும்.

நடைமுறைகளுக்குப் புறம்பாகப் பதவிகள், நியமனங்கள், கேள்விகோரல்கள் ஆகியவற்றை வழங்குவதற்காக ஜனாதிபதியைப் பயன்படுத்திக்கொள்ள எவராலும் முடியாது.

எனவே இத்தகைய மோசடிக்காரர்களை நம்பி ஏமாற வேண்டாமென ஜனாதிபதி அலுவலகம் மக்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றது.

ஜனாதிபதியின் பெயரைப் பயன்படுத்தி மக்களை ஏமாற்றி சலுகைகளைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்போருக்கு எதிராகச் சட்ட ரீதியாகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்–என்றுள்ளது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## நேர்மையை நிரூபிக்க வாய்ப்பு

கொழும்பில் உள்ள சுவிட்ஸர்லாந்துத் தூதரகத்தின் விஸாப் பிரிவில் பணியாற்றும் இலங்கையரான பெண் அதிகாரி ஒருவர் தமது பணி முடிந்து வீடு திரும்புகையில் வெள்ளைவானில் கடத்தப்பட்ட பின்னர், அச்சுறுத்தப்பட்டு, விசாரிக்கப்பட்டு அவரது கைத்தொலைபேசியில் இருந்த விடயங்கள் உருவப்பட்ட பின்னர், மிரட்டலோடு விடுவிக்கப்பட்டார் என்று பரவிய செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

2015 ஜனவரியில் ராஜபக்ஷக்களின் வீழ்ச்சியோடு நாட்டில் வெள்ளைவான் கலாசாரம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்பட்ட நிலையில், பத்து நாள்களுக்கு முன்னர் புதிய ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற கையோடு மீண்டும் இந்த வெள்ளைவான் கலாசாரம் குறித்துப் பீதி கிளப்பப்பட்டிருக்கின்றது.

உள்நாட்டில் மட்டுமல்லாமல், சர்வதேச ரீதியிலும் கோட்டாவின் புதிய ஆட்சிப்பீடத்துக்குப் பெரும் இழுக்கைத் தேடித் தரும் சம்பவமாக இது முகிழ்ந்திருக்கின்றது.

இந்தச் சம்பவம் உண்மையில் நடந்திருக்கலாம். அல்லது இட்டுக் கட்டப்பட்டிருக்கலாம். அல்லது புதிய ஆட்சிப் பீடத்துக்கு ஆரம்பத்திலேயே ஒரு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் சதித்திட்டத்துடன் ஈடுபாடுள்ள தரப்புகளினால் உண்மையிலேயே இப்படி ஒரு கடத்தல் நடவடிக்கை அரங்கேற்றப்பட்டிருக்கலாம்.

எது, எப்படி என்றாலும் உண்மைகள் பகிரங்கமாக, வெளிப்படையாக அம்பலப்படுத்தப்பட்டால் மட்டுமே தெளிவான நிலைமை ஏற்படும்.

அதுவரை புதிய ஆட்சிப்பீடத்தின் மீதே குற்றச்சாட்டு விரல் நீட்டப்படும் என்பதை புதிய ஆட்சிப் பீடம் உணர வேண்டும்.

உண்மையில் இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்குமானால் –

– ஒன்றில், அது புதிய ஆட்சியாளர்களின் ஆசீர்வாதம், ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

– அல்லது, புதிய ஆட்சிப் பீடத்தின் மீள் வருகையோடு, யுத்த காலத்தில் சில விசாரணைகளுக்காகத் தங்களுக்குத் தரப்பட்டிருந்த சிறப்புரிமை, இப்போது மீண்டும் தமக்கு வழங்கப்பட்டுள்ளது என்ற தவறான கற்பிதத்தோடு சில அதிகார வர்க்கங்கள், புலனாய்வுக் குழுக்கள் இந்த நடவடிக்கையைப் ஒப்பேற்றியிருக்கலாம்.

எது சரி என்றாலும் –

எது உண்மை என்றாலும் –

நீதி, நியாயமான – உண்மையான – பக்கச்சார்பற்ற – ஒரு புலன் விசாரணை நடத்தப்பட்டால் மட்டுமே உண்மை வெளிப்பட சாத்தியம் ஏற்படும்.

தற்போதுள்ள தொழில்நுட்ப வசதிகளின் கீழ் இத்தகைய சம்பவம் ஒன்று குறித்து அடி ஆழம் வரைச் சென்று விசாரணை நடத்தி, புலனாய்வு செய்து, உண்மைகளைக் கண்டறிவது அப்படி ஒன்றும் கஷ்டமானதல்ல.

சம்பந்தப்பட்ட கடத்தல் இடம்பெற்ற பகுதியிலிருக்கும் சி.சி.ரி.வி. கமராக்களை நுணுக்கமாகப் பரிசோதித்தால் பல விடயங்கள் துல்லியமாக அம்பலமாகி விடும்.

ஆனால், அப்படியான ஒரு புலன் விசாரணையை நடத்துவதற்கான பற்றுறுதியும், திடசங்கற்பமும், நேர்மைத் துணிச்சலும் புதிய ஆட்சிப் பீடத்துக்கு உள்ளதா என்பதே கேள்வி.

எனினும், அப்படியான அரசியல் துணிச்சலோடும் நேர்மைத்தனத்தோடும் புதிய ஆட்சிப் பீடம் நடந்து கொண்டு –

இத்தகைய மோசமான சம்பவத்துக்குக் காரணமான தரப்புகளையும், விடயங்களையும் அரசியல் கோழைத்தனத்தை துறந்து, வெளிப்படையாக அம்பலப்படுத்த முன்வந்து –

அதன் வழியே செயற்படுமானால், புதிய ஆட்சிப் பீடத்தின் நேர்மைத்தனம் பற்றிய மதிப்பு உயரும். சர்வதேச ரீதியிலும், உள்நாட்டிலும் அதன் மீதான பார்வை மீளாய்வு செய்யப்படும் அரிய சந்தர்ப்பம் கிட்டும்.

அதை விடுத்து, 2015க்கு முன்னர் நடந்தமை போன்று இந்த விடயங்களை நில விரிப்புக்கும் கீழ் போட்டு மூடி மறைக்க முற்பட்டாலோ –

அல்லது பாதுகாப்புத் தரப்பினரும், பொலிஸாரும் இத்தகைய விவகாரங்களில் இழைக்கும் தவறுகள், முன்னெடுக்கும் நடவடிக்கைகள் விசாரிக்கப்படவே முடியாதவை என்ற தனது முன்னைய பத்தாண்டு கால ஆட்சிப் பீடத்தின் குருட்டுத்தனமான போக்கை இப்போதும் பின்பற்ற எத்தனித்தாலோ –

அது, அந்த ஆட்சிப் பீடம் தனது தலையில் தானே மண்ணை அள்ளிப் போடுகின்றது என்பதுதான் அர்த்தம். If there's a will there's a way என்றொரு ஆங்கிலச் சொற்றொடர் உண்டு. மனமுண்டானால் வழியுண்டு என்பதுதான் இதன் அர்த்தம்.

இந்த விவகாரத்தில் நேர்மையாக விசாரணை நடத்துவதற்கு ஆட்சித் தலைமைக்கு நேர்மையான எண்ணமும் தலைமைத்துவ மாண்பும் இருக்குமானால் உண்மை கண்டறியப்பட நாள்கள் தேவை இல்லை. செய்யுமா புதிய ஆட்சிப் பீடம்?

# வெள்ளை வானை மீண்டும் ஞாபகப்படுத்துகிறது அரசு

## மகேஷ் சேனநாயக்க காட்டம்



கொழும்பு, நவ. 29

பொலிஸ் அதிகாரிகள் சிலரின் பெயர் பட்டியலை வெளிப்படுத்தி அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறாமல் தடுத்திருப்பது அடிப்படை உரிமை மீறும் செயலாகும். அரசின் இந்த நடவடிக்கை மக்களுக்கு வெள்ளை வானை ஞாபக மூட்டுவதாக உள்ளது என முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள தேசிய மக்கள் அமைப்பு காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் அதிகாரிகள் சிலர் நாட்டைவிட்டு வெளியேறாமல் அவர்கள் தொடர்பில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இது பிரச்சினைக்குரிய விடயமாக இன்று பார்க்கப்படுகின்றது. 2010ஆம் ஆண்டு இந்த நிலைக்கும் நானும் ஆளாகி இருந்தேன். நான் இராணுவத்தில் இருந்து வெளியேறிய நிலையில் சிவில் உறுப்பினராகவே நாட்டைவிட்டுச் சென்றேன். என்றாலும் அதன் பாதிப்பு தொடர்பில் என்னால் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

அத்துடன் இலங்கை பொலிஸ் அதிகாரி ஒருவர் தனது குடும்பம் சகிதம் நாட்டைவிட்டு சென்றுள்ளதை அறிகின்றேன். அதேபோன்று இரகசிய பொலிஸ் பிரிவு அதிகாரிகள் சிலர் நாட்டை விட்டு வெளியேறாமல் தடுப்பதற்கு அல்லது அவர்கள் உரிய அனுமதியுடன் செல்ல வேண்டும் என்பதற்காக அவர்களின் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டிருக்கின்றது.

இது எந்த நாட்டிலும் இடம்பெறக்கூடாத விடயமாகவே நான் காண்கின்றேன். நாட்டுப் பிரஜையாராக இருந்தாலும் அவர் எந்த நாட்டுக்குச் செல்வதற்கும் அவருக்கு உரிமை இருக்கின்றது.

என்றாலும் கடமையில் இருக்கும் நிலையில் செல்வதாக இருந்தால் அந்தத் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அதில் மாற்றுக்கருத்து இல்லை.

என்றாலும் இவர்களின் பெயர், ஆள் அடையாள அட்டை, முகவரி மற்றும் அவர்களின் படம் வெளியில் செல்வது நாட்டின் பாதுகாப்புக்குத் தடையாக இருக்கலாம்.

எந்த அரசாக இருந்தாலும் நாட்டின் பாதுகாப்புக் கடமையை மேற்கொள்ளும் நிறுவனம் மற்றும் அந்த அதிகாரிகள் தொடர்பில் இதனையும் விட பொறுப்புடன் செயற்பட்டிருக்கவேண்டும்.

தற்போது இடம்பெற்றிருக்கும் ஒரு சில சம்பவங்கள் மீண்டும் வெள்ளை வானை ஞாபகப் படுத்தி இருக்கின்றன. அத்துடன் கடந்த ஒரு வார காலத்தில் நீதிமன்றங்களினால் விடுக்கப்பட்ட தீர்ப்புக்கள் மற்றும் கட்டளைகளைப் பார்க்கும் போது நீதிமன்றங்களில் வருடக் கணக்கில் விசாரித்துவரும் வழக்குகளை விரைவாக முடிவுக்கு கொண்டுவர முடியும் என்பது தெளிவாகின்றது – என்றார். (ஐ)

## பிரகீத் எக்னெலிகொட கடத்தல்;

# 9 புலனாய்வு அதிகாரிகளுக்கு குற்றப்பத்திரம் கையளிப்பு!

கொழும்பு, நவ. 29

கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட விவகாரத்தில் கிரிதல இராணுவ முகாமின் கட்டளை அதிகாரியாகச் செயற்பட்ட லெப்டினன்ட் கேணல்கள் இருவர் உட்பட இராணுவப் புலனாய்வு உறுப்பினர்கள் 9 பேருக்கும் கொழும்பு விசேட மூவரடங்கிய மேல் நீதிமன்றம் குற்றப்பத்திரிகை கையளித்தது.

10 வருடங்களாக இடம்பெற்ற மிக நீண்ட விசாரணைகளின் பின்னர் இந்த 9 பிரதிவாதிகளுக்கும் எதிராகக் குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் வெளிநாடு செல்வது விசேட மேல் நீதிமன்றினால் தடை செய்யப்பட்டு அவர்களது கடவுச்சீட்டுக்களை நீதிமன்றில் ஒப்படைக்கவும் உத்தரவிடப்பட்டது.

கொழும்பு விசேட மேல் நீதிமன்ற நீதிபதிகளான, சம்பத் அபேகோன், சம்பத் விஜேரத்ன மற்றும் கிஹான் குலதுங்க ஆகியோர் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இதன்போதே இவ்வாறு குற்றப் பத்திரிகை கையளிக்கப்பட்டுப் பிணை வழங்கப்பட்டது. (ஐ)

யாழ். சமூக செயற்பாட்டு மையம்
JSAC
பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
(காரத்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
ஆணுக்கு நிகராய் இங்கு பெண்களும் உழைக்கையிலே
கொடுப்பனவுகளில் மட்டும் பாரபட்சங்கள் ஏன்?
சம கூலி பேணுவோம். சமத்துவத்தினை பேணுவோம்!
16
2019

வடமாகாண மரம் நடுகை மாதம்
கார்த்திகை - 2019
"மரம் போன்ற ஒரு அழகான கவிதையை ஒரு போதும் காணமாட்டேன் என நினைக்கிறேன்."
ஜொய்ஸ் கில்மர் (அமெரிக்க எழுத்தாளர்)

நாளை
30.11.2019
சனிக்கிழமை
நட்சத்திரம்: பூராடம் மு.ப 10.52 வரை
திதி: சதுர்த்தி மு.ஜ 8.24 வரை
இராகுகாலம்: 9.14 – 10.44
சுப நேரம்: 3.14 – 4.44

# கடலில் காவியமான மாவீரர்களுக்கு முல்லைத்தீவு கடற்கரையில் அஞ்சலி







முல்லைத்தீவு, நவ. 29

மாவீரர்நாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு கடற்கரையிலும் இடம்பெற்றது.

கடலில் காவியமாகியவர்களும், ஏனைய மாவீரர்களும் இதன்போது நினைவு கூரப்பட்டனர்.

சரியாக மாலை 06.05மணிக்கு, மணிஓசை எழுப்பப்பட்டு, அகவணக்கம் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து ஈகச்சுடர் ஏற்றப்பட்டது.

மாவீரர்களின் சகோதரர்களான சுதன், பீற்றர் இளஞ்செழியன், மாவீரர் ஒருவரின் தாயாரான செபமாலை மற்றும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் ஆகியோர் பொதுச்சுடரை ஏற்றி வைத்தனர்.

சம நேரத்தில் ஏனைய மாவீரர்களின் பெற்றோர்களாலும், சுடரேற்றப்பட்டு மாவீரர்களுக்கு உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வுகளில் முல்லைத்தீவு வர்த்தகர் சங்கத்தினர் மற்றும் பெருந்திரளான மாவீரர்களின் உறவினர்கள், பொது மக்கள் பங்கேற்றனர். (ஐ)

## இறப்பர், தேயிலை, மிளகு இறக்குமதி செய்யத் தடை

கொழும்பு, நவ. 29

இறப்பர், தேயிலை, மிளகு இறக்குமதிகள் தடை செய்யப்படவுள்ளன.

இணை அமைச்சரவைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரண இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உற்பத்தி செய்யக்கூடிய விவசாய உற்பத்திகளை, உள்நாட்டிலே உற்பத்தி செய்து இறக்குமதியைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் மக்களுக்கு பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## யாழ் பல்கலையில் விளையாட்டுப் பிரிவு வர்ண இரவு நிகழ்வு

யாழ் பல்கலைக்கழகத்தின் உடற் கல்வி அலகும் விளையாட்டு அவையும் இணைந்து நடத்தும் '2018 வர்ண இரவு' நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 4 மணி முதல் யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி அரங்கில் நடைபெறம்.

யாழ். பல்கலைக்கழகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி பேராசிரியர் கே.கந்தசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## மன்னாரில் டெங்கு நோயை கட்டுப்படுத்த நடவடிக்கை!

மன்னாரில்டெங்குநோய் தீவிரமாகப் பரவி வரும் நிலையில், காய்ச்சல்ஏற்படும் சந்தர்ப்பங்களில் தகுதி வாய்ந்த மருத்துவர்களிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளுமாறுவேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் டெங்கு அபாயம் தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை நேற்று விழிப்புணர்வுத் துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்தத் துண்டுப் பிரசுரத்தில் –

உங்கள் கிராமங்களில் டெங்கு குருதிப்பெருக்கு நோய் மீண்டும் தீவிரமாக பரவி வருகின்றது.

வீடுகள், உள்ளிட்ட பொது இடங்களில் டெங்கு நுளம்பு பெருகும் மிக முக்கியமான இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. நீர் சேமித்து வைக்கும் தொட்டி, மலசலகூடப் பாவனைக்கு நீர்சேமித்துவைக்கும்தொட்டி அல்லது வாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

நீர் சேகரிக்கும் பாத்திரம் மற்றும் நில மட்டத்துக்கு கீழ் உள்ள நீர்த்தாங்கிகளில் நுளம்புகள் உள்ளே செல்லாத வகையில் மூடியினால் மூடி வைக்கவேண்டும்.

அகற்ற முடியாத நீர்தேங்கும் பகுதிகளில் கப்பீஸ் போன்ற மீன்களை வளர்ப்பத ன் மூலம் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த முடியும்.

டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகமாக காணப்படும் நேரங்களான காலையிலும், மாலையிலும் 5 மணி முதல் 8 மணி வரையுமான காலப் பகுதியில் நுளம்பு கடித்தலில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள் – என்றுள்ளது. (ஐ)

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகத்துக்கு மூடு விழா!

கொழும்பு, நவ. 29

ஊடகங்களுக்கு தகவல்களை வழங்கி வந்த பொலிஸ் ஊடகப் பிரிவின் நடவடிக்கைகள் நேற்று முன் தினம் முதல் நிறுத்தப்பட்டுள்ளன. அத்துடன் பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் பணியும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

உயர்மட்ட உத்தரவிற்கமைய நேற்று முன் தினம் பொலிஸ் பேச்சாளர் மற்றும் அவரது அலுவலகத்தின் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இனிவரும் காலங்களில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஊடாக அல்லாமல், பாதுகாப்பு ஊடக தகவல் மத்திய நிலையம் ஊடாகவே தகவல்கள் வழங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## மின் தடை

யாழ்ப்பாணம், நவ.29

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**

பூதர்மடம், கோப்பாய், இருபாலை, வசந்தபுரம், கட்டைப்பிராய், இலங்கநாயகி, ஆடியபாதம் வீதி, நல்லூர், கல்வியங்காடு, திருநெல்வேலி ஒரு பகுதி, திருநெல்வேலி சந்தை பிரதேசம், திருநெல்வேலி பாற்பண்ணை பிரதேசம், இராமலிங்கம் ஆடியபாதம் வீதி சந்தி, இராமலிங்கம் ஆடியபாதம் வீதி சந்தி, கிளிகடை, நல்லூரப்பன் வீதி, அரசடி, சங்கத்தானை, மீசாலை, வங்களாவீதி, அல்லாரை, வெள்ளாம்பொக்கட்டி, கெற்பெலி, கச்சாய், பாலாவி, கச்சாய் துறைமுகம், அம்மன் கோவிலடி, புத்தூர் சந்தி, இராமாவில், கொடிகாமம், நாவலடி, வறணி, கரம்பைக்குறிச்சி, வாழைத்தோட்டம், வேம்பிராய், மந்துவில், தாவழை, இயற்றாழை, கலைவாணி, மிருசுவில் வடக்கு, சுட்டிபுரம், எழுதுமட்டுவாழ், உசன், விடத்தற்பளை, மிருசுவில் தெற்கு, தவசிக்குளம், நாவலடி, சங்கானை, பண்டத்தரிப்பு, விழிசிட்டி, தொல்புரம், சுழிபுரம், கள்ளவேம்படி, வடலியடைப்பு, சில்லாலை, சாந்தை, விளான், பெரிய விளான், இளவாலை, மாரீசன்கூடல், சேந்தாங்குளம், மாதகல், காஞ்சிபுரம், ஜம்புகோளப்பட்டிணம், குசுமாந்துறை, காட்டுபுலம், மாகியப்பிட்டி, பெருமாள்கடவை, சண்டிலிப்பாய் வைரவர் கோவிலடி, கந்தரோடை, ஆலங்குலாய் சண்டிலிப்பாய், தொம்பை வீதி, உடுவில் மேலதிக அரசாங்க அதிபர் அலுவலக வீதி, அம்பலவாணர் வீதி ஆகிய இடங்களிலும் –

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

பளை நகரம், புலோப்பளை, முகமாலை, எழுதுமட்டுவாள், கிளாலி, Topical Lank ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில் -** இறம்பைக்குளம், ராணி அரிசி ஆலை, லங்கா அரிசி ஆலை, S.V.R அரிசி ஆலை. சூசைப்பிள்ளையார் குளம், பார் வீதி, மில் வீதி, ஓவியா ஹோட்டல், கந்தசாமி கோவில் வீதி, 1ஆம் குறுக்குத்தெரு, 2ஆம்குறுக்குத்தெரு, உளுக்குளம், நெடுங்குளம், வெளிக்குளம், கீர்த்தி அரிசி ஆலை, மடுகந்தவிலிருந்து துட்டுவாகை வரை, குடாகச்சக்கொடிய கல் உடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில் -**

எழுத்தூரிலிருந்து தலைமன்னார் வரை, Timex ஆடைத்தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ்தொழிற்சாலை, கூல்மென்ஐஸ்தொழிற்சாலை, Industrial Estate I & II, Palmyra house, தலைமன்னார் கடற்படை முகாம், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசனத் திட்டம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் வைத்தியசாலை, உயிலங்குளம், கமலாம்பிகை அரிசி ஆலை, முதலைக்குத்தி, வட்டுப்பித்தன்மடு, புதுகாமம், நொச்சிக்குளம், கள்ளிக்கட்டைகாடு, சீனதுறைமுகம் ஆகிய பிரதேசங்களிலும், – மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## கிழக்கு ஆளுநர் அலுவலகம் முன் மாவீரர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி

திருமலை, நவ. 29

திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் மாவீரர் அஞ்சலி இடம்பெற்றது.

கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி அலையும் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வு சங்கத்தின் தலைவி நாகேந்திரன் ஆசா தலைமையில் இடம்பெற்றது.

திருகோணமலை சிவன் கோயிலுக்கு அருகில் கடந்த சில வருடங்களாக இடம்பெற்று வந்த இந்த அஞ்சலி நிகழ்வே இம்முறை ஆளுநர் அலுவலகம் முன்பாக இடம் பெற்றது. சிவன் கோயிலைச் சுற்றி இராணுவத்தினர் குவிக்கப்பட்டடிருந்தமையால் அச்சமடைந்த ஏற்பாட்டாளர்கள்,



ஆளுநர் அலுவலகத்தின் முன்பாக நினைவு நிகழ்வை நடத்தினர்.

காலைக்கதிர் Kalaikathir


# துப்புரவுப் பணியாளர் பதவிக்கு என்ஜினீயரிங் பட்டதாரிகளும்!

## வேலை வாய்ப்பின்மையால் பரிதாபம்





கைக்குழந்தைகளுடன் வந்தவர்கள் காத்திருக்கும் காட்சி.

கோவை மாநகராட்சியில் காலியாக உள்ள துப்புரவுப் பணியாளர் வேலைக்கான நேர்காணலுக்கு என்ஜினீயரிங் பட்டதாரிகள் குவிந்தனர்.

கோவை மாநகராட்சியில் 2 ஆயிரம் நிரந்தரத் துப்புரவு பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்கள் தவிர ஆயிரத்து 500 பேர் ஒப்பந்தத் துப்புரவுத் தொழிலாளர்களும் பணியாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் கோவை மாநகராட்சியில் காலியாக உள்ள 549 நிரந்தரத் துப்புரவுப் பணியாளர் வேலைக்கு கோவை மாநகராட்சி விண்ணப்பங்களை வரவேற்றது. அதன்படி 7 ஆயிரம் பேர் விண்ணப்பித்தனர். இவர்களுக்கான நேர்காணல் கோவை மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடந்தது.

இதற்காக வந்த விண்ணப்பதாரர்கள் வெவ்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவர்களுக்குத் தனித்தனியாக நேர்காணல் நடத்தப்பட்டன. கொட்டகைகள் போடப்பட்டு அதில் அழைப்பு கடிதம் வைத்திருந்தவர்கள் மட்டும் அமர வைக்கப்பட்டனர்.

இந்த வேலைக்கு குறைந்தபட்ச வயது 21 என்றும் அதிகபட்ச வயது 56 என்றும் நிர்ணயிக்கப்பட்டிருந்ததால் 40 வயதுக்கு மேற்பட்டவர்களும் வந்திருந்தனர். துப்புரவு பணிக்கான கல்வித் தகுதி தமிழ் எழுத, படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

ஆனால், நேர்காணலுக்கு வந்த 70 சதவீதம் பேர் குறைந்தபட்சம் எஸ்.எஸ்.எல்.சி. படித்திருந்தனர். மேலும் டிப்ளமோ, ஐ.டி.ஐ. படித்தவர்கள், பட்டதாரிகள், பட்டமேற்படிப்பு படித்தவர்கள், இரண்டு பட்டங்கள் பெற்றவர்கள் மற்றும் என்ஜினீயரிங் பட்டதாரிகளும் குவிந்தனர்.

நேர்காணல் புதனன்றும் நேற்றும் காலை முதல் மாலை வரை நடைபெற்றது. நேர்காணல் தொடர்ந்து இன்று (வெள்ளிக்கிழமை) வரை நடக்கிறது.

மாநகராட்சி அலுவலக வளாகத்தில் ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கில் விண்ணப்பதாரர்கள் வந்ததால் அவர்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

## தாக்ரே முதல்வர் பதவி ஏற்க முன் ஆசிரியர் பதவியிலிருந்து விலகல்

மகாராஷ்டிரா மாநிலத்தின் 19ஆவது முதலமைச்சராக நேற்று மாலை பதவியேற்ற உத்தவ் தாக்ரே அதற்கு முன்னர் சிவசேனாவின் கட்சிப் பத்திரிக்கையான சாம்னாவின் ஆசிரியர் பதவியிலிருந்து விலகினார்.



இதையடுத்து, சாம்னாவின் ஆசிரியர் பதவிக்கு, சிவசேனா எம்.பி சஞ்சய் ராவத் நியமிக்கப்பட்டுள்ளார். ஆதாயம் தரும் இரட்டை பதவிகளை வகிக்க கூடாது என்ற அடிப்படையில், பணப்பலன் கிடைத்து வந்த சாம்னா ஆசிரியர் பதவியில் இருந்து உத்தவ் தாக்ரே பதவி விலகியிருக்கிறார்.

இதற்கிடையே, சிவசேனாவின் நேற்றைய சாம்னா நாளிதழ், பாரதீய ஜனதாக் கட்சியை கடுமையாக விமர்சித்திருப்பதோடு, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவாரை, வழிகாட்டி எனக் குறிப்பிட்டு புகழாரம் சூட்டியிருக்கிறது.

## மகாராஷ்டிரா மாநில அரசை இயக்கும் நிழல் முதல்வராக ஆதித்யா தாக்கரே?



காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் வலியுறுத்தல் காரணமாக மகாராஷ்டிரா முதலமைச்சராகப்பொறுப்பேற்க உத்தவ் தாக்கரே அரை மனதாக முடிவு செய்த நிலையில், முதலமைச்சர் பதவிக்காக பா.ஜ.கவுடன் மல்லுகட்டிய அவரது மகன் ஆதித்யா நிழல் முதலமைச்சராக அரசை இயக்குவார் என்று கருதப்படுகிறது.

தாக்கரே குடும்பத்தில் இருந்து முதன்முதலாக தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஆதித்யாவுக்கு அமைச்சரவையில் முக்கியப் பொறுப்பு வழங்கப்படுமா என்றும் எதிர்பார்ப்புகள் எழுந்துள்ளன.

ஆனால் அவர் அமைச்சரவையில் இடம் பெற மாட்டார் என்றும், கட்சியின் முக்கியப் பொறுப்பில் இருந்தபடியே சிவசேனா தலைமையிலான அரசு மீது அதிகாரம் செலுத்துவார் என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஏக்நாத் ஷிண்டே, சஞ்சய் ரத்தோட், ஆஷிஷ் ஜெய்ஸ்வால் உள்ளிட்டோருக்கு அமைச்சரவை பொறுப்புகளை வழங்க சிவசேனா திட்டமிட்டுள்ளது.

# மராட்டிய முதல்வராக நேற்று உத்தவ் தாக்கரே பதவியேற்பு





மும்பை,நவ.29

மராட்டிய முதலமைச்சராக உத்தவ் தாக்கரே நேற்று மாலை பதவி ஏற்றார்.

டிசெம்பர் 3 ஆம் திகதிக்குள் சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபிக்குமாறு அவருக்கு ஆளுநர் காலக்கெடு கொடுத்துள்ளார்.

மராட்டிய சட்டசபை தேர்தலில் பாரதீய ஜனதா – சிவசேனா கூட்டணி வெற்றி பெற்றும் கருத்து வேறுபாடு காரணமாக ஆட்சி அமைக்க முடியாததால், அந்த மாநிலத்தில் கடந்த 12 ஆம் திகதி ஜனாதிபதி ஆட்சி அமல்படுத்தப்பட்டது.

அதன்பிறகு அங்கு அடுத்தடுத்து அரசியல் திருப்பங்கள் நிகழ்ந்தன. காங்கிரஸ், சரத்பவாரின் தேசியவாத காங்கிரஸ் கட்சிகளுடன் கூட்டு சேர்ந்து சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே ஆட்சி அமைக்க இருந்த நிலையில், எதிர்பாராத திருப்பமாக கடந்த 23 ஆம் திகதி அதிகாலை 5.37 மணிக்கு மராட்டியத்தில் ஜனாதிபதி ஆட்சி விலக்கி கொள்ளப்பட்டு, தேசியவாத காங்கிரஸ் மூத்த தலைவர் அஜித்பவார் ஆதரவுடன் பாரதீய ஜனதா ஆட்சி அமைத்தது. தேவேந்திர பட்னாவிஸ் முதலமைச்சராகவும், அஜித்பவார் துணை முதலமைச்சராகவும் பதவி ஏற்றனர்.

இதை எதிர்த்து சிவசேனா, தேசியவாத காங்கிரஸ், காங்கிரஸ் கட்சிகள் தொடர்ந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் புதன் மாலைக்குள் சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபிக்குமாறு தேவேந்திர பட்னாவிஸுக்கு உத்தரவிட்டதால், தீர்ப்பு வெளியான சில மணி நேரத்தில் துணை முதலமைச்சர் பதவியைவிட்டு அஜித்பவார் விலகினார். அவரை தொடர்ந்து முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிஸும் ராஜினாமாச் செய்தார்.

அவசரகதியில் பதவி ஏற்ற பாரதீய ஜனதா அரசின் ஆயுள் வெறும் 4 நாள்களில் முடிந்து போனது. இதனால் அந்த கட்சிக்கு சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய அவசியமும் இல்லாமல் போனது.

இதைத் தொடர்ந்து சிவசேனா, தேசியவாத காங்கிரஸ், காங்கிரஸ் கட்சிகள் கூட்டணி (மராட்டிய வளர்ச்சி முன்னணி) அரசு அமைக்க வழி பிறந்தது.

செவ்வாய் மாலை மும்பையில் நடைபெற்ற 3 கட்சிகளின் எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே முதலமைச்சராகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். பின்னர் மூன்று கட்சி தலைவர்களும் ஆளுநர் பகத்சிங் கோஷ்யாரியை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினர். அப்போது தங்களுக்கு 166 எம்.எல்.ஏ.க்கள் ஆதரவு இருப்பதாக கூறி அவர்கள் கடிதம் கொடுத்தனர்.

அதை ஏற்று புதிய அரசு அமைக்க உத்தவ் தாக்கரேவுக்கு அழைப்பு விடுத்த ஆளுநர், வருகிற டிசம்பர் 3 ஆம் திகதிக்குள் சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபிக்குமாறு அவருக்கு ‘கெடு’ விதித்தார்.

சிவசேனா தலைமையிலான கூட்டணி அரசின் பதவி ஏற்பு விழா நேற்று (வியாழக்கிழமை) மாலை 6.40 மணிக்கு, சிவசேனா நிறுவனர் பால்தாக்கரேயின் சமாதி இருக்கும் மும்பை தாதர் சிவாஜி பார்க் மைதானத்தில் நடைபெற்றது.

இங்குதான் பால்தாக்கரே ஒவ்வொரு ஆண்டும் தசரா பொதுக்கூட்டத்தை நடத்தி தொண்டர்கள் மத்தியில் எழுச்சி உரையாற்றி வந்தார். இங்கு நடைபெற்ற விழாவில் புதிய முதல்வராக அவர் மகன் உத்தவ் தாக்கரே பதவி ஏற்றார். அவருக்கு ஆளுநர் பகத்சிங் கோஷ்யாரி பதவிப் பிரமாணமும், இரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

உத்தவ் தாக்கரேவுடன் கூட்டணியின் 3 கட்சிகளைச் சேர்ந்தவர்களும் மந்திரிகளாக பதவி ஏற்றார்கள்.

5 ஆண்டுகளும் உத்தவ் தாக்கரே முதலமைச்சராகப் பதவி வகிப்பது என்று கூட்டணியில் முடிவு செய்யப்பட்டு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

முதலமைச்சராகப் பதவி ஏற்ற உத்தவ் தாக்கரே தற்போது மராட்டிய சட்டசபை உறுப்பினராகவோ அல்லது மேல்சபை உறுப்பினராகவோ இல்லை. எனவே அவர் 6 மாதங்களுக்குள் ஏதாவது ஒரு சபையின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

இதற்கிடையே, மராட்டிய சட்டசபைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் நேற்று முன்தினம் எம்.எல்.ஏ.க்களாக பதவி ஏற்றுக்கொண்டனர். அவர்களுக்கு தற்காலிக சபாநாயகர் காளிதாஸ் கோலம்கர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

மும்பை ஒர்லி தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தவ் தாக்கரேயின் மகன் ஆதித்ய தாக்கரே பதவி ஏற்கும் போது, சிவசேனா கட்சி எம்.எல்.ஏ.க்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

# அமெரிக்காவில் கடும் பனிப்பொழிவு

அமெரிக்காவில் கடுமையான பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதால், பல மாகாணங்களில் போக்குவரத்து முடங்கி உள்ளது.

அந்நாட்டின் கொலராடோ முதல் மிச்சிகன் மற்றும் மிசிசிப்பி வரையிலான பல மகாணங்களில் கடுமையிலான பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. இதனால், அந்தப் பகுதிகளில் போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மத்திய நெபரஸ்கா, தெற்கு டகோடா, மின்னிசோட்டா, விஸ்கோன்சின் மகாணங்களில் பல ஊர்களில் தலையில் 6 முதல் 12



அங்குலம் வரையில் பனிப்பொழிவு இருக்கும் எனவும், இதனால், வெளிச்சம் குறைவாக இருக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கொலராடோவில் 20 அங்குல அளவுக்குப் பனி பொழிந்து தள்ளியது. டென்வர் டென்வர் நகரில் 11 அங்குல அளவிற்கும், அங்குள்ள விமான நிலையத்தில். 9.5 அங்குல அளவிற்கும் பனிப்பொழிவு ஏற்பட்டது. இதனால், 500 விமானங்களில் பயண நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டது. சில விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

## சீனாவில் சுரங்கம் இடிந்து விழுந்ததில் 4 பேர் சாவு; எட்டுப் பேரை மீட்க முயற்சி

பீஜிங், நவ.29

சீனாவில் சுரங்கம் இடிந்து விழுந்து 4 பேர் பலியாகினர். மேலும் 8 பேரை மீட்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

சீனாவின் யுன்னான் மாகாணம் லிங்காங் நகரில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் சுரங்கப்பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வந்தன. செவ்வாய் மாலை பத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் சுரங்கப்பாதைக்கான கட்டுமான பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது சற்றும் எதிர்பாராத வகையில் சுரங்கப்பாதைக்கு மேலே இருந்த மண் குவியல் திடீரென சரிந்தது. இதில் சுரங்கப்பாதை இடிந்து விழுந்தது. 13 தொழிலாளர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டனர். விபத்து குறித்த தகவல் கிடைத்ததும் தீயணைப்பு வீரர்கள் மற்றும் மீட்பு குழுவினர் விரைந்து வந்து தீவிர மீட்பு பணியில் இறங்கினர். எனினும் 4 பேரை பிணமாகத்தான் மீட்க முடிந்தது. ஒரே ஒருவர் மட்டும் உயிருடன் மீட்கப்பட்டார். அவர்



மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இடிபாடுகளுக்குள் இன்னும் 8 தொழிலாளர்கள் சிக்கியுள்ளனர். அவர்களின் கதி என்ன என்பது தெரியவில்லை. நவீன கருவிகளின் உதவியோடு அவர்களை மீட்பதற்கான பணிகள் முழு வீச்சில் நடந்து வருகின்றன.

## ராணுவத் தளபதியின் பதவி நீடிப்பு ரத்து: பாகிஸ்தானில் பெரும் அரசியல் பதற்றம்

இஸ்லாமாபாத்,நவ.29

பாகிஸ்தான் இராணுவத் தளபதிக்கு பதவி நீடிப்புச் செய்து அந்நாட்டு அரசு பிறப்பித்த உத்தரவை உச்ச நீதிமன்றம் ரத்து செய்ததால் பதற்றம் நிலவுகிறது.

பணிக்காலம் முடிந்த நிலையில் பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் ஜாவீத் பஜ்வாவிற்கு மேலும் மூன்று ஆண்டுகள் பதவி நீடிப்பு வழங்கி இம்ரான்கான் அரசு உத்தரவிட்டது.

ஆனால் அமைச்சரவையின் பெரும்பான்மை அமைச்சர்களின் ஆதரவு இல்லாமை மற்றும் பாகிஸ்தான் அதிபரின் ஒப்புதல் பெறாதமை போன்ற காரணங்களைச் சுட்டிக் காட்டி இராணுவத் தளபதியின் பதவி



நீடிப்பை அந்நாட்டு உச்சநீதிமன்றம் ரத்து செய்துள்ளது. இதனால் பஜ்வா பதவியில் தொடர முடியாத சூழல் நிலவுகிறது.

மேலும் இராணுவத்திற்குள்ளும் அசாதாரண சூழல் நிலவுவதால் இம்ரான் கான் அரசைக் கவிழ்க்கும் முயற்சிகள் நடைபெறலாம் என்ற பதற்றம் ஏற்பட்டிருக்கிறது.

## ஹொங்கொங் பிரேரணையில் டிரம்ப் சீனாவின் எதிர்ப்பை மீறி கையொப்பம்



வொஷிங்டன்,நவ.29

சீனாவின் கடும் எதிர்ப்பை பொருட்படுத்தாமல் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஹொங்கொங் ஜனநாயகப் போராட்டங்களுக்கு ஆதரவான பிரேரணையில் கையெழுத்திட்டார்.

இந்தப் பிரேரணை சட்டமானால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று அமெரிக்காவுக்கு சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது. ஹொங்கொங்கில் மனித உரிமைகளை மீறுவோர் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கவும் அமெரிக்காவில் நுழையத்தடை விதிக்கவும் இந்தப் பிரேரணை வகை செய்கிறது.

சீன அதிபர் சீ ஜின்பிங் மீதுள்ள மதிப்பை கடந்து இந்த பிரேரணையில் தாம் கையெழுத்திட்டார் எனக் கூறிய அதிபர் டிரம்ப், சீன தலைவர்களும் ஹொங்கொங் ஜனநாயகப் பிரதிநிதிகளும் தங்கள் கருத்து வேறுபாடுகளுக்குப் பேச்சு மூலம் தீர்வு காண வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே பீஜிங்கில் உள்ள அமெரிக்கத் தூதர் டெர்ரி பிரான்ஸ்தத்தை அழைத்து கண்டனம் தெரிவித்த சீன வெளியுறவு அமைச்சகம், சீனாவின் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தலையிட வேண்டாம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

## போதைப் பொருள் விற்பனை கும்பல்களை இனி பயங்கரவாத அமைப்புகளாக கருத அமெ. முடிவு



மெக்ஸிக்கோவில் செயல்படுகின்ற போதைப்பொருள் விற்பனைக் கும்பல்களை, இனி பயங்கரவாத அமைப்புகளாக அடையாளம் காண அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

வட அமெரிக்க நாடான மெக்ஸிக்கோவின் பல்வேறு பகுதிகளில் போதைப்பொருள் விற்பனை கும்பல்களின் அட்டகாசம் அதிகரித்து வருகிறது.

இதனால் அமெரிக்கர்களின் வாழ்க்கையும் தொடர்ந்து பாதிப்படைந்து வருவதாகக் கூறப்படுகிறது.

சில வாரங்களுக்கு முன்பு கூட மெக்ஸிக்கோவில் திருமண விழாவுக்காக கார்களில் சென்ற 9 அமெரிக்கர்களைப் போதை பொருள் விற்பனை கும்பல் திடீரெனத் தாக்குதல் நடத்திக் கொலை செய்தது. கார்களில் சென்றவர்கள் தங்களது போட்டிக் கும்பல் என நினைத்தே அந்தத் தாக்குதலை அவர்கள் நடத்தினர் எனவும் கூறப்பட்டது.

இந்நிலையில், இவ்வகை கும்பல்களுக்கு முடிவுகட்டத் திட்டமிட்டுள்ள அமெரிக்க அதிபர் டிரம்ப், பயங்கரவாத அமைப்புகள் எவ்வாறு நடத்தப்படுவார்களோ அதைப் போலவே, போதைப்பொருள் விற்பனை கும்பல்களையும் அமெரிக்கா இனி நடத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## வெள்ளை மாளிகைக்கு மேல் பறந்த மர்ம விமானத்தால் பெரும் பரபரப்பு

வொஷிங்டன், நவ.29

அமெரிக்காவில் வெள்ளை மாளிகைக்கு மேலே பறந்த மர்ம விமானத்தால் பரபரப்பு ஏற்பட்டது.

அமெரிக்காவின் தலைநகர் வொஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகை அந்த நாட்டு ஜனாதிபதியின் வசிப்பிடம் மற்றும் அவரது அதிகாரப்பூர்வ அலுவலகமாக இருந்து வருகிறது. இது 24 மணி நேரமும் பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும்.



கடந்த 2001ஆம் ஆண்டு நடந்த இரட்டை கோபுரத் தாக்குதலுக்கு பின்னர் வெள்ளை மாளிகையின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டது. குறிப்பாக வெள்ளை மாளிகைக்கு மேலே அனுமதியின்றி விமானங்கள் பறக்க தடைவிதிக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை வெள்ளை மாளிகைக்கு மேலே மர்ம விமானம் ஒன்று பறந்தது ரேடார் கருவி மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து உடனடியாக அங்கு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது.

வெள்ளை மாளிகையை சுற்றிப்பார்க்க வந்திருந்த பார்வையாளர்கள் அனைவரும் உடனடியாக வெளியேற்றப்பட்டனர். பின்னர் பாதுகாப்பு நடவடிக்கைக்காக வெள்ளை மாளிகை தற்காலிகமாக மூடப்பட்டது.

மர்மவிமானத்தைக்கண்டறியஉடனடியாகப் போர் விமானங்கள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டன. எனினும் கண்டுபிடிக்கப்படவில்லை.

அதனை தொடர்ந்து, சுமார் ஒரு மணி நேரத்துக்குப் பிறகு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக வெள்ளை மாளிகை அறிவித்தது.

# சிறுபான்மை இனத்தவர்களின் முன்னால் மண்டியிடாத சிங்களத் தலைவரை உருவாக்கி வெற்றிபெற்றுள்ளோம்!

பல வருடங்களாக இலங்கை மன்னர்களின் முக்கிய பகுதியாக விளங்கிய – சமீபத்தில் மத வன்முறைகளால் பாதிக்கப்பட்ட – மலைகளின் நகரத்தில், இலங்கை புதிய தலைவரை தெரிவு செய்திருப்பது குறித்து பௌத்த தலைவர்கள் மகிழ்ச்சியில் திளைக்கின்றனர்.

இலங்கையின் பெரும்பான்மை இனத்திற்கு இன்னொரு பொற்காலத்தை ஏற்படுத்துவார் இந்தப் புதிய தலைவர் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

சிறுபான்மையினத்தவர்கள் முன்னாள் மண்டியிடாத ஒரு சிங்கள தலைவர் நாட்டிற்கு அவசியம் என்ற கொள்கையை நாங்கள் உருவாக்கினோம் என்கின்றார் பௌத்த மத குருவான ஞானசார தேரர்.

அந்தக் கொள்கை வெற்றிபெற்றுள்ளது என அவர் குறிப்பிடுகின்றார்.

ஞானசார தேரரும் அவரது பொதுபல சேனாவின் ஏனைய உறுப்பினர்களும், இலங்கையின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷவிற்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்தனர்.

முன்னாள் பாதுகாப்பு செயலாளரான கோட்டாபய ராஜபக்ஷ தமிழ் இன கிளர்ச்சிக்காரர்களுடனான போரை முடிவிற்கு கொண்டுவந்தமைக்காக சிங்கள பௌத்தர்களால் பெரும்வீரராகக் கருதப்படுகின்றார்.

எனினும் அவர் யுத்த அநீதிகளில் ஈடுபட்டார், அரசாங்கத்தின் அனுசரனையுடன் இடம்பெற்ற காணாமல்போகச் செய்யப்படுதலிற்கு உத்தரவிட்டார் என்ற குற்றச்சாட்டுகள் காரணமாக சிறுபான்மை இனத்தவர்கள் அவர் குறித்து அச்சம் கொண்டுள்ளனர்.

அரசாங்கம் சிறுபான்மையினத்தவர்களின் கோரிக்கைகளுக்கு அதிகளவு செவிமடுக்கின்றது என சிங்கள தேசியவாதிகள் கடந்த சில வருடங்களாகக் குற்றம்சாட்டி வந்துள்ளனர். முன்னைய அரசாங்கத்தின் மீதே அவர்கள் இந்த குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். அந்த அரசாங்கத்தில் இந்துக்களும் முஸ்லிம்களும் அமைச்சர்களாகப் பதவி வகித்தனர்.





இந்தியாவின் தென்பகுதி கரையில் உள்ள 22 மில்லியன் சனத்தொகையை கொண்ட இலங்கையின் 70 வீதமானவர்கள் பௌத்தர்கள், சிங்களவர்கள்.

சிங்கள மன்னர்களினதும் அவர்களின் ஆலோசகர்களினதும் காலம் 1800 இன் ஆரம்பத்தில் முடிவிற்கு வந்தது.

அவர்களைத் தோற்கடித்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் 1948 வரை இலங்கையை ஆண்டனர். சுதந்திர இலங்கையில் பௌத்தத்திற்கு முதன்மை வழங்கப்பட்டபோதிலும் ஏனைய மதங்களிற்கான சுதந்திரம் உறுதி செய்யப்பட்டிருந்தது.

ஆனால் பௌத்த தேசியவாதம் தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இஸ்லாமிய தீவிரவாதத்தினால் உந்தப்பட்டவர்களினால் மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் 269 பேர் கொல்லப்பட்டமையைத் தொடர்ந்து பௌத்த தேசியவாதம் இலங்கை அரசியலில் முன்னிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தேர்தல் பிரச்சாரங்களின் போது பௌத்த மதகுருமாருடன் அடிக்கடி தோன்றிய ராஜபக்ஷ அந்தத் தாக்குதல் குறித்துச் சுட்டிக்காட்டுவார், மீண்டும் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடியவர் தானே எனத் தன்னை முன்னிலைப்படுத்துவார்.

தற்போது இலங்கை ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்ஷ வெற்றிபெற்றுள்ள நிலையில் இஸ்லாமியர் களைப் புறக்கணித்துவிட்டு சிங்கள கலாச்சாரத்தை புதிய ஜனாதிபதி ஊக்குவிக்க வேண்டும் என ஞானசார தேரர் போன்றவர்கள் விரும்புகின்றனர்.

இஸ்லாமிய மத பாடநூல்களை இல்லாமல் செய்யவேண்டும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஹலால், புர்கா, இஸ்லாமிய வங்கி, காதீ நீதிமன்றம், ஷரியா பல்கலைகழகங்கள் அனைத்தும் சமூக ஒருமைப்பாட்டை அழித்து விட்டன எனப் பேட்டியொன்றில் ஞானசார தேரர் தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷவினால் ஒரு சட்டம், ஒரு தேசம், ஒரு நாட்டை உருவாக்க முடியும் என்றார் அவர்.

ஜனாதிபதி ராஜபக்ஷவிற்கும் அவரது சகோதரர் பிரதமர் ராஜபக்ஷவிற்கும் தானே ஆலோசகர் என தெரிவித்தார் ஞானசார தேரர்.

கோட்டாபய ராஜபக்ஷ கடந்தகாலங்களில் ஞானசார தேரரைப் பாராட்டியுள்ளார்.

ஆனால் அவரது (கோட்டாபய ராஜபக்ஷவினது) பேச்சாளர் மொகான் சமரநாயக்க இதனை நிராகரித்தார்.

உத்தியோகபூர்வமான ஆலோசகர்களும், உத்தியோகப்பற்றற்ற ஆலோசகர்களும் இதுவரை நியமிக் கப்படவில்லை என அவர் குறிப்பிட்டார்.

இலங்கை ஜனாதிபதியாகப் பதவியேற்றவேளை கோட்டாபய ராஜபக்ஷ நான் அனைத்து இலங்கையர்களினதும் ஜனாதிபதி எனத் தெரிவித்திருந்தார்.

இன, மத, மொழி வேறுபாடுகளிற்கு அப்பால் நான் அனைத்து இலங்கையர்களிற்கும் சேவையாற்றவேண்டும் என்பதை நான் அறிந்திருக்கின்றேன் என அவர் குறிப்பிட்டார்.

எனினும் கண்டியில் உள்ள முஸ்லிம்கள் மத்தியில் இது குறித்து சந்தேகம் காணப்படுகின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கு முன்னதாகவே வன்முறையைச் சந்தித்த அந்த பகுதிக்கு ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்துள்ளமையால் என்ன நடக்கலாம் என்பது குறித்து முஸ்லிம்கள் மெல்லிய குரலில் பேசிக்கொள்கின்றனர்.

முஸ்லிம்கள் மீண்டும் தாக்கப்படலாம் என அச்சத்துடன் இருக்கின்றோம் என்கின்றார் இஸ்லாமிய போதகரான பசால் சம்சுடீன்.

இவரது சகோதரரான 23 வயது அப்துல் பாஜித் கண்டியில் இடம்பெற்ற கலவரத்தில் கொல்லப்பட்டார்.

பௌத்த மதகுருமார் அடங்கிய கும்பலொன்று பெட்ரோல் குண்டை வீட்டிற்குள் எறிந்த வேளை அவர் மூச்சுத்திணறிப் பலியானார்.

சிங்கள மக்களில் ஒரு பகுதியினர் எங்களைப் பிழையாகப் புரிந்துகொண்டுள்ளனர், நாங்கள் ஈவிரக்கமற்றவர்கள், அழிக்கப்படவேண்டியவர்கள் என அவர்கள் கருதுகின்றனர் – என்கிறார் பசால் சம்சுடீன்.

பௌத்தர்கள் பெரும்பான்மையாக உள்ள நாடுகளில் மத தேசியவாதமும் முஸ்லிம்களுடனான மோதலும் அதிகரித்து வருகின்றன.

மியன்மாரில் இலங்கை போன்று முஸ்லிம்கள் தங்கள் மதநம்பிக்கைக்கும் வாழ்க்கை முறைக்கும் ஆபத்தானவர்கள் என்ற கருத்து தேசியவாதிகள் மத்தியில் காணப்படுகின்றது. பௌத்தர்கள் பெரும்பான்மையினத்தவர்களாக காணப்படுகின்ற போதிலும் இந்த உணர்வு காணப்படுகின்றது.

பயங்கரவாதத்துடன் தொடர்புடைய இஸ்லாமிய தீவிரவாத சக்திகளின் நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டி தமது நிலைப்பாட்டை நியாயப்படுத்தும் பௌத்த தேசியவாதிகள் பின்னர் இதனை சமூக ஊடகங்களில் பரப்புகின்றனர்.

இலங்கையை இஸ்லாமிய நாடாக மாற்றும் நோக்கம் அவர்களிற்கு உள்ளது. அவர்கள் அந்த நோக்கத்துடன் செயற்படுகின்றனர் ஆனால் நாங்கள் அதனை அனுமதிக்கமாட் டோம் என்கின்றார் பொதுபல சேனாவின் யட்டேவட்ட தர்மானந்த.

சிங்கள, பௌத்தர்கள் மிகவேகமாகக் காணாமல்போகும் இனம் என்கின்றார் அவர். அதனைப் பாதுகாப்பது எங்களின் கடமை என அவர் குறிப்பிடுகின்றார்.

தங்களிற்குள் காணப்படும் தீவிரவாதப் போக்குகள் குறித்து பல பௌத்த மதகுருமார்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஞானசார தேரரும் ஏனைய தேசியவாதிகளும் வன்முறைகளில் இருந்து தங்களைத் தனிமைப்படுத்திக் காண்பிக்க முயன்றுள்ளனர்.

ஆனால் அவர்களின் செல்வாக்கு உள்ளமை தெளிவான விடயம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அமைச்சரவையிலிருந்த முஸ்லிம் அமைச்சரும், இரு முஸ்லிம் ஆளுநர்களும் பதவி விலகவேண்டும் எனக் கோரி பௌத்த மதகுருவும் நாடாளுமன்ற உறுப்பினருமான அத்துரலிய ரத்னதேரர் கண்டியில் உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டார்.

உயிர்த்தஞாயிறு தாக்குதலின் பின்னர் எழுச்சி பெற்ற தேசியவாதத்தினால் பயனடைந்தவர் ஞானசார தேரர்.

> **பௌத்த, சிங்களத்தின் இந்தப் பெருமையினால் நாட்டில் முஸ்லிம் மக்கள் பெரும் அச்ச நிலையில்**

நீதிமன்ற அவமதிப்பிற்காக ஆறு வருட சிறைத் தண்டனை பெற்ற பின்னர் ஜனாதிபதியினால் அவருக்குப் பொதுமன்னிப்பு வழங்கினார். அவர் கண்டிக்கு சென்று அத்துரலிய ரத்ன தேரருடன் உண்ணாவிரதப்போராட்டத்தில் இணைந்தார்.

## பாதுகாப்பற்றவர்களாக உணரும் முஸ்லிம்கள்

முஸ்லீம்கள் தாங்கள் பாதுகாப்பற்றவர்களாக உணருகின்றனர், அவர்கள் தாக்குதலிற்கு உள்ளாகியுள்ளனர் எனக் கருதுகின்றனர், தங்களைப் பாதுகாப்பதற்கான அரசாங்கத்தின் திறன் மீது நம்பிக்கையற்றவர்களாக உள்ளனர் என்கின்றார் விரிவுரையாளரும் இலங்கை முஸ்லிமுமான பரா மில்லர்.



முஸ்லிம் இளைஞர்கள் புதிய குழப்பத்தில் உள்ளனர் என்கின்றார் அவர்.

அவர்கள் சீற்றத்தில் உள்ளனர், அவர்கள் மத்தியில் ஆத்திரம் அதிகரித்துவருகின்றது, அவர்கள் ஒழுங்கமைக்கப்பட்ட தீவிரவாதத்தை உறுதியாக நிராகரித்துள்ளனர், ஆனால் தங்களைப் பாதுகாக்க ஏதாவது செய்யவேண்டும் எனக் கருதுகின்றனர் என்கின்றார் அவர்.

கொழும்பின் பெரிய பள்ளிவாசலில் சமீபத்தில் இடம்பெற்ற வெள்ளிக்கிழமை தொழுகையின் போது வர்த்தகரான எம்.எஸ்.எம். ஜனீர் முஸ்லிம்களிற்கு எதிரான முரண்பாடு புதிய விடயமல்ல, ஆனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கு பின்னர் அது உக்கிரமானதாக மாறியுள்ளது எனக் குறிப்பிடுகின்றார்.

மீண்டும் வன்முறைகள் நிகழக்கூடும் என்ற அச்சத்தில் தாங்கள் வாழ்கின்றனர் என் அவர் தெரிவித்தார்.

நன்றி - இலக்கியா இணையம்

# கொழும்பில் தூதரக அதிகாரி கடத்தல்: நீதியான விசாரணை கோரியது சுவிஸ்

கொழும்பு, நவ. 29

கொழும்பிலுள்ள சுவிர்ஸலாந்து தூதரகத்தின் விசா அதிகாரி ஒருவர் கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் உடனடி விசாரணை நடத்தக் கோரியுள்ளது சுவிற்சர்லாந்து அரசு.

கடந்த திங்கட்கிழமை கொழும்பிலுள்ள சுவிஸ் தூதரகத்தின் இலங்கை உத்தியோகத்தர் ஒருவர் வானில் கடத்தப்பட்டார் எனவும், அவரிடம் பல விடயங்களை விசாரித்த கடத்தல்காரர்கள் இறுதியில் இதனை வெளியில் சொன்னால் கொலை செய்துவிடுவதாக அச்சுறுத்தினார்கள் என்றும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

அத்துடன் அந்த அதிகாரியின் கைத்தொலைபேசியும் பறிக்கப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் சுவிற்சர்லாந்தில் தஞ்சம் கோரிய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரி ஒருவர் குறித்தே தூதரக அதிகாரியிடம் கடத்தல்காரர்கள் விசாரித்தனர் எனச் சொல்லப்படுகிறது.

வெளிநாட்டமைச்சர் தினேஷ் குணவர்தனவைச் சந்தித்த இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் இந்த விவகாரம் குறித்து பிரஸ்தாபித்துள்ளார். அதேசமயம் சுவிஸில் உள்ள இலங்கைத் தூதுவரை அந்த நாட்டு அரசு பேர்னில் உள்ள வெளிவிவகார அமைச்சுக்கு அழைத்துள்ளது .

இலங்கை இந்த விவகாரம் குறித்து நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும். உண்மை கண்டறியப்பட வேண்டும் என சுவிஸ் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் பியர் அலைன் எல்சிஞ்சர் தெரிவித்துள்ளார்.

சுவிஸ் தூதரக அதிகாரி கடத்தல் சம்பவத்தால் இலங்கை அரசுக்கும் சுவிற்சர்லாந்து அரசுக்குமிடையில் இராஜதந்திர ரீதியில் முரண்பாடுகள் ஏற்படும் நிலைமை உருவாகியுள்ளது. (ஐ)







# யாழ்தேவி தடம் புரண்டதை ஆராய மூவர் கொண்ட குழு!

கொழும்பு, நவ. 29

யாழ்தேவி கடுகதி ரயில் நேற்று முன் தினம் தடம் புரண்டது குறித்து விசாரிக்க மூன்று பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களக் கண்காணிப்பாளர் காமினி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

தடம்புரண்ட ரயில் பெட்டிகள் அகற்றப்பட்டுவருகின்றன எனவும், தண்டவாளத்தில் பழுது பார்க்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன எனவும் அவர் கூறினார்.

கங்கேசன்துறையிலிருந்து கொழும்பு சென்ற யாழ்தேவி கடுகதி ரயில் நேற்று முன் தினம் கல்கமுவ ரயில்நிலையம் அருகே தடம் புரண்டது. இதனால் வடக்கு ரயில் மார்க்கத்தில் சேவைகள் பாதிக்கப்பட்டன.

கொழும்பிலிருந்து வரும் ரயில்கள் அம்பன்போல வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து வரும் ரயில்கள் கல்கமுவ வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இடைப்பட்ட தூரத்தில் விசேட பஸ்கள் இயக்கப்படுகின்றன. (ஐ)

# கிழக்கு பல்கலையிலும் மாவீரர் அஞ்சலி!








மட்டக்களப்பு, நவ. 29

கிழக்குப்பல்கலைக்கழகத்திலும் நேற்று முன்தினம் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் வந்தாறுமூலை வளாகத்தில் மாணவர்கள், மாவீரர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். (ஐ)

# வலி. கிழக்கில் பிரதேச டெங்கு பாதுகாப்புக்காக சுகாதாரத் தொழிலாளர்களின் விடுமுறை ரத்து!

யாழ்ப்பாணம், நவ. 29

டெங்கு பரவும் அபாயம் உள்ளதையடுத்து கழிவகற்றும் பொறிமுறையைத் துரிதமாக மேற்கொள்ளும் வகையில் வலி கிழக்குப் பிரதேச சபையின் கழிவு அகற்றுதலுடன் தொடர்புடைய பணியாளர்கள் அனைவருக்கும் விடுமுறைகள் இரத்துச் செய்யப்படுகின்றன என வலி கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ் குடாநாட்டில் டெங்கு பரவுதல் அதிகரித்துள்ளது. டெங்கு நுளம்புக்கான புகை அடித்தல் நடவடிக்கைகாக பொதுச் சுகாதார வைத்திய அதிகாரியால் கோரிக்கை விடுக்கும் அளவுக்கு எமது சபை எரிபொருள்களை தாமதமின்றி வழங்கிவருகின்றது.

மேலும், டெங்கு பிரசார நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது. அப் பிரச்சாரங்களையும் அதிகரிக்கின்றோம். சகல தரப்புக்களின் ஒத்துழைப்புடனேயே நாம் ஏற்பட்டிருக்கின்ற டெங்கு பரவுதலைக் கட்டுப்படுத்த முடியும். எமது பரந்த நிலப்பரப்பையும் அதிகளவான மக்களையும் கொண்ட பிரதேச சபையில் கழிவு அகற்றுவதில் பல்வேறுபட்ட இடர்பாடுகள் உள்ளன. ஆளணிப் பற்றாக்குறை, வாகனப் பற்றாக்குறை எனப் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றோம்.

நிரந்தர நியமனம் செய்யப்படவேண்டிய தொழிலாளர்களுக்கான நேர்முகத்தேர்வுகளை நடத்திவிட்டு அவர்களது நியமனம் தொடர்பான அரச நிர்வாக நடைமுறைகளுக்காகக் காத்திருக்கின்றோம். இவ்வாறான நிலையில் வெளிவாரிப் பணியாளர்களையே நாம் அதிகளவில் சுத்திகரிப்புப் பணிகளுக்காகப் பயன்படுத்தவேண்டியுள்ளது. பொதுவில் வெளிவாரிப் பணியாளர்களை விடுமுறைகள் ரீதியாகக் கட்டுப்படுத்துவதில் கஷ்டங்கள் இருக்கின்றன. எது எவ்வாறிருந்தபோதும் நாம் தற்போதைய அவசர சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு சுத்திகரிப்புடன் தொடர்புடைய சகலரினதும் விடுமுறைகளை இரத்துச் செய்துள்ளோம்.

பிரதேச சபைகள் கழிவகற்றும் பொறிமுறையில் எதிர்கொள்ளும் சவால்களின் அடிப்படையில் பரந்த காணிகளைக் கொண்டிருப்போர் சுயமாகவே கழிகளை உரிய வகையில் – சுற்றுச்சுழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் – அப்புறப்படுத்தி ஒத்துழைக்க முடியும்.

கழிவு அகற்றுதலில் பிரதேச சபைகள் உணவுக்கழிவுளை அகற்றுவதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளன. சிலர் தமது தோட்டங்களில் வெட்டப்படும் வாழைகளைக்கூட தெருவில் போட்டு விட்டுப் பிரதேச சபைகள் அவற்றினை அகற்றவேண்டும் என நினைக்கின்றனர். கழிவுப் பொருள் முகாமைத்துவம்பற்றி மக்களும் அதிகளவில் பொறுப்படைய வேண்டியதை உணர்கின்றோம். கழிவுகளை வீதிகளில் வீசுவோர், உரிய பெறிமுறையின்றி கழிவகற்றலில் செயற்படுவோருக்கு எதிராகப் பொதுநன்மையினைக் கருத்தில் கொண்டு கடும் நடவடிக்கை எடுக்கப்படும். – என்றார். (ஐ)


northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

# சர்வதேசக் குத்துச் சண்டையில் ஹாட்லியின் ஷானுஜன் சாதிப்பு




சுவீடனில்போராஸ்நகரில்நடைபெற்ற கிங் ஒவ் த ஷரிங் (KING OF THE RING 2019) சர்வதேச குத்துச்சண்டையில் யாழ்ப்பாணம் பருத்தித்துறை ஹார்ட்லி கல்லூரியைச் சேர்ந்த விக்னேஸ்வரன் ஷானுஜன் வெள்ளிப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

ஐரோப்பாவில் வருடந்தோறும் பாடசாலை மாணவர்களுக்காக நடைபெறுகின்ற பெரியளவிலான குத்துச் சண்டைப் போட்டித் தொடரான கிங் ஒவ் த ரிங் சர்வதேச குத்துச்சண்டைப் போட்டிகள் சுவீடனின் போராஸ் உள்ளக அரங்கில் கடந்த 21ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை நடைபெற்றன.

இந்தப் போட்டித் தொடரில் பங்கு பற்றிய கண்டி திருத்துவக் கல்லூரி மாணவனான அத்தாப் மன்சில் மற்றும் கண்டி வித்யார்த்த கல்லூரி மாணவன் சுபான் ஹன்சஜ ஆகிய இருவரும் வெள்ளிப் பதக்கங்களை வெற்றி கொண் டனர்.

இதில் சுவீடன், இங்கிலாந்து, நோர்வே, பின்லாந்து, போர்த்துக்கல், ஸ்கொட்லாந்து, உகண்டா, கனடா, இந்தியா மற்றும் இலங்கை உள்ளிட்ட 22 நாடுகளைச் சேர்ந்த சுமார் 500இற்கும் அதிகமான வீரர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆண்களுக்கான 81 கிலோ கிராம் எடைப் பிரிவு இறுதிப் போட்டியில் பருத்தித்துறை ஹார்ட்லி கல்லூரி மாணவன் விக்னேஸ்வரன் ஷானுஜன் வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

இலங்கை பாடசாலை மாணவர்கள் சர்வதேச குத்துச்சண்டைப் போட்டியொன்றில் கலந்துகொள்வது இதுவே முதல் தடவையாகும். (ஐ)

# நியூஸிலாந்து தொடருக்கு முன் சாஹா குணமடைந்து விடுவார்

இந்திய அணியின் விக்கெட் காப்பாளர் விருத்திமான் சாஹா, எதிர்வரும் ஆண்டு நடைபெறவுள்ள நியூஸிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடருக்கு முன்னதாக குணமடைந்து விடுவார் என இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

பங்களாதேஷ் அணிக்கெதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் கொல்கத்தாவில் நடந்த பகலிரவு டெஸ்ட் போட்டியில், இந்திய அணியின் விக்கெட் காப்பாளர் விருத்திமான் சாஹாவுக்கு கை விரலில் காயம் ஏற்பட்டது.

முதலுதவி சிகிச்சை சாஹாவுக்கு அளிக்கப்பட்ட நிலையில், அதன்பின் நடந்த மருத்துவப் பரிசோதனையில் அவரின் விரல்களில் சிறிய அறுவை சிகிச்சை செய்யவேண்டியிருப்பது தெரிய வந்தது.

இதையடுத்து, மும்பையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் விருத்திமான் சாஹாவுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை நடந்தது.

இந்த நிலையில் அவருடைய காயத்தின் தன்மை குறித்து இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில், 'இந்தியக் கிரிக்கெட் அமைப்பின் மருத்துவக் குழுவில் உள்ள கைமணிக்கட்டு நிபுணர் உதவியுடன், விருத்திமான் சாஹாவின் கை விரல்களில் ஏற்பட்ட எலும்பு முறிவுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. தற்போது மும்பையில் உள்ள ஒரு மருத்துவமனையில் சாஹா சிகிச்சை பெற்று வருகிறார். விரைவில் குணமடைந்து தேசிய கிரிக்கெட் நிலையத்துக்கு திரும்புவார்'எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே இந்திய அணிக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகையில், 'பெப்ரவரி 14ஆம் திகதி நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணி விளையாட உள்ளது. வெலிங்டன், கிறிஸ்ட் சர்ச் நகரில் இந்த இரு டெஸ்ட் போட்டிகளுக்கு முன்பாக ஹேமில்டனில் 3 நாள்கள் பயிற்சி போட்டியிலும் இந்திய அணி விளையாட உள்ளது.

இந்த டெஸ்ட் தொடருக்கு முன்பாக ஜனவரி மாதத்தில் 5 ரி – 20 போட்டிகள், 3 ஒருநாள் போட்டிகளிலும் இந்திய அணி விளையாட உள்ளது. ஆகையால், டெஸ்ட் தொடர் தொடங்கும் முன்பாக சாஹா தனது காயத்தில் இருந்து குணமடைந்துவிடுவார் என சபை நம்புகிறது' எனத் தெரிவித்தன.

2018ஆம் ஆண்டு நடந்த ஐ.பி.எல் தொடரில் தோள்பட்டை காயம் காரணமாக சிகிச்சையில் இருந்த சாஹா, ஒக்டோபர் மாதம் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட், பங்களாதேஷிற்கு எதிரான டெஸ்ட் தொடரில் இடம் பெற்றார்.

காயம் காரணமாக சாஹா ஓய்வில் சென்றபின் டெஸ்ட் போட்டிக்கு ரிஷப் பந்த்தை தயார் செய்யும் முனைப்பில் தேர்வுக் குழுவினர் இறங்கினர்.




ஆனால், சில போட்டிகளில் மட்டுமே சிறப்பாகச் செயற்பட்ட ரிஷப் பந்த் பெரும்பாலான போட்டிகளில் ஏமாற்றம் அளித்தார். இந்த சூழலில்தான் அனுபவம் வாய்ந்த சாஹா மீண்டும் அணிக்குள் அழைக்கப்பட்டார்.

கடந்த வாரம் நடந்த பகலிரவு டெஸ்ட் போட்டியின்போதுதான் சாஹா டெஸ்ட் போட்டிகளில் 100 பிடியெடுப்புக்களை எடுத்து சாதனை படைத்தார் என்பது நினைவுக்கூரத்தக்கது.

35 வயதான விருத்திமான் சாஹா, இதுவரை 37 டெஸ்ட் போட்டிகளில் 1238 ஓட்டங்களை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியக்கிரிக்கெட் அணி, நீண்டதொரு தொடரில் விளையாடுவதற்காக அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் நடுப்பகுதியில் நியூஸிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

அங்கு செல்லும் இந்தியா அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ரி – 20 தொடர், மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.




# கிரிக்கெட்டிலிருந்து சிறிது காலம் விலகி இருக்க விரும்பும் கெய்ல்!

மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரரான கிறிஸ் கெய்ல், கிரிக்கெட்டில் இருந்து சிறிது காலம் விலகி இருக்கவுள்ளார் என அறிவித்துள்ளார்.

இந்தியா – மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையில் தலா மூன்று போட்டிகள் கொண்ட 'ருவென்ரி 20' மற்றும் ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெற இருக்கிறது.

இதன் முதல் போட்டி எதிர்வரும் டிசெம்பர் 6 ஆம் திகதி இடம்பெறுகிறது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள கிறிஸ் கெய்ல், இந்தியாவுக்கு எதிரான



ஒருநாள் தொடரில் கலந்து கொள்ள இயலாது. சிறிது காலம் ஓய்வு எடுக்க முடிவு செய்துள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

கெய்ல் மேலும் கூறுகையில் –

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழு, இளைஞர்களுடன் இணைந்து நான் விளையாட விரும்பியது. ஆனால், நான் இந்த வருடம் முழுவதும் கிரிக்கெட்டில் இருந்து விலகி இருக்க விரும்புகிறேன்.

பிக் பாஷ் 'ருவென்ரி 20' லீக்கிலும் விளையாடமாட்டேன். மீண்டும் எப்போது கிரிக்கெட்டுக்கு திரும்புவேன் என்பதை உறுதியாகக் கூற முடியாது. பங்களாதேஷ் பிறீமியர் லீக்கில் என்னைத் தேர்வு செய்துள்ளனர். வீரர்கள் வரைவு பட்டியலில் என்னுடைய பெயர் எப்படி சேர்ந்தது என்று எனக்குத் தெரியாது – என்றார்.

2020 ஆம் ஆண்டு 'ருவென்ரி 20' உலகக் கிண்ணப் போட்டிகள் ஆஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ள நிலையில், அதில் கெய்ல் பங்குபற்றுவாரா? இல்லையா? என்பது தெளிவில்லாமல் உள்ளது.

ஆனால், இது தொடர்பில் மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபையும் பயிற்சியாளர் சிமன்ஸ் மற்றும் தலைவர் கிரோன் பொலார்ட் ஆகியோர் ஆலோசித்து வருகின்றனர்.

# ஆசியப் பதினொருவர் அணியில் விளையாட இந்திய வீரர்களை அழைக்கும் பங்களாதேஷ்

ஒட்டுமொத்த கிரிக்கெட் இரசிகர்களையும் கொண்டாட வைக்கும் வகையில், ஆசிய பதினொருவர் நட்சத்திர அணிக்கும் உலக பதினொருவர் நட்சத்திர அணிக்குமிடையிலான போட்டித் தொடரொன்றை நடத்த, பங்களாதேஷ் கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது.

இந்த நிலையில், ஆசிய பதினொருவர் நட்சத்திர அணிக்காக விளையாடுவதற்கு இந்திய வீரர்களான டோனி, விராட் கோஹ்லி, ரோஹித் சர்மா, ஜஸ்பிரிட் பும்ரா, ஹார்திக் பாண்ட்யா, புவனேஷ்வர்குமார், ரவீந்திர ஜடேஜா ஆகியோரை அனுமதிக்கவேண்டும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம், பங்களாதேஷ் கிரிக்கெட் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

எனினும் இந்தப் போட்டியில் டோனி பங்கேற்பது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இங்கிலாந்தில் நடைபெற்று முடிந்த உலகக்கிண்ணத் தொடரில் நியூஸிலாந்து அணிக்கெதிரான அரையிறுதிப் போட்டியில், டோனி இறுதியாக விளையாடி இருந்தார்.

தற்போது இந்தியா இராணுவத்துடன் நேரத்தைச் செலவிட்டுவரும் டோனி, எப்போது மீண்டும் அணிக்கு திரும்புவார் என்பது குறித்து இதுவரை உத்தியோகபூர்வ அறிவிப்பு இல்லை. ஆகையால் ஆசிய பதினொருவர் நட்சத்திர அணிக்காக அவர் விளையாடுவது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ரி –20 போட்டியாக நடைபெறவுள்ள இந்தத் தொடரில் இரண்டு ஆட்டங்கள் நடைபெறும் எனவும், அடுத்த வருடம் மார்ச் மாதம் அந்தப் போட்டிகள் நடைபெறும் எனவும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ஆசிய பதினொருவர் அணி என்பது, சர்வதேச கிரிக்கெட் சபையினால் அந்தஸ்து பெற்று கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபடுகின்ற ஆசிய அணிகளான இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற அனைத்து அணிகளிலிருந்தும் திறமைவாய்ந்த 11 வீரர்களை கொண்டமைந்த அணியாகும்.

அதே போன்று உலக பதினொருவர் அணி என்பது சர்வதேச கிரிக்கெட் சபையினுடைய அந்தஸ்து கொண்டுள்ள ஆசிய அணிகள் தவிர்ந்த ஏனைய அனைத்து அணிகளினுடைய 11 வீரர்களை கொண்டமைந்த அணியாகும்.

இந்த அணிகளில் சர்வதேச அரங்கிலிருந்து ஓய்வு பெற்ற நட்சத்திரங்களும் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்தொடரின் முதல் போட்டி எதிர்வரும் ஆண்டு மார்ச் மாதம் 18ஆம் திகதியும், இரண்டாவது போட்டி மார்ச் மாதம் 21ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. இரண்டு போட்டிகளுமே மிர்புரில் நடைபெறுகின்றன.

## பாசையூர்ப் பகுதியில் 2 கிலோ வெடிமருந்து!



பாசையூர் அந்தோனியார் தேவாலயத் துக்கு அருகில் உள்ள கடற்கரைப் பகுதியிலிருந்து இரண்டு கிலோ வெடிமருந்து மீட்கப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய அந்தப் பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போதே இவை மீட்கப்பட்டன என யாழ். விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

மேற்படி வெடிமருந்து தடைசெய்யப்பட்ட மீன்பிடி நடவடிக்கைக்காகக் கொண்டுவரப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

அந்தவகையில் இந்த வெடிமருந்து தொடர்பாக இதுவரை எந்தச் சந்தேகநபர்களும் கைது செய்யப்படவில்லை என்பதுடன் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ஐ)

## ஊடகவியலாளர் பெருமாளின் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.29

மூத்த ஊடகவியலாளர் அமரர் பி.எஸ் பெருமாளின் 31 ஆவது நினைவு நாள் பிரார்த்தனையும் அஞ்சலியும் எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11 மணிக்கு யாழ்ப்பாணம், சேர் பொன்னம்பலம் இராமநாதன் வீதி, ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் கலாபூஷணம் செ.யோசப்பாலா தலைமையில் நடைபெறும்.

'ஊடகத் துறையும் பெருமாளும்' என்ற தலைப்பில் 'காலைக்கதிர்' ஆசிரியர் ந.வித்தியாதரன், 'சிலோன் ருடே' சிரேஷ்ட செய்தி ஆசிரியர் அனந்த் பாலகிட்னர் ஆகியோர் உரையாற்றுவர்.

அங்கு 'பெருமாளின் பக்தி இலக்கியம்' நூலின் அறிமுக உரையை யாழ் பல்கலைக்கழக ஊடகக் கற்கை நெறித்துறையின் தலைவர் எஸ். ரகுராம் ஆற்றுவார்.

## எதிர்க்கட்சித் தலைவர் பதவி;

# ஐ.தே.கவின் நிலைப்பாட்டை கோருகின்றார் சபாநாயகர்!



கொழும்பு, நவ. 29

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவுக்கு வழங்குமாறு கோரி 57 எம்.பிக்கள் கையொப்பமிட்ட கடிதம் தமக்குக் கிடைத்துள்ளதாகவும் அது குறித்து கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை கூடி ஆராய்ந்து தெரிவிக்குமாறும் சபாநாயகர் கரு ஜயசூரிய ஐக்கிய தேசியக் கட்சியிடம் கோரியுள்ளார்.

அந்த முடிவுகளின் அடிப்படையில் அடுத்த நாடாளுமன்ற அமர்வின்போது எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பதைத் தம்மால் அறிவிக்க முடியுமெனச் சபாநாயகர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## மாவீரர் தினம் அனுஷ்டிக்கக் கோரிய மலையக இளைஞர்கள் இருவர் கைது

கொழும்பு, நவ. 29

மாவீரர் தினத்தை அனுஷ்டிக்குமாறு கோரி துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இளைஞர்கள் இருவர் பொகவந்தலாவை பொலிஸாரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவை டின்சின் நகரத்தில் உள்ள தொலைத்தொடர்பு நிலையத்தில் துண்டுப்பிரசுரங்களைப் பிரதியெடுத்து இவர்கள் விநியோகம் செய்தனர் எனவும், அவ்வாறான துண்டுப்பிரசுரங்கள் பலவற்றைக் கைப்பற்றினர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சிறிலங்கன் விமான சேவைக்கு 1 வருடத்தில் ரூபா 4400 கோடி நட்டம்

கொழும்பு, நவ. 29

சிறிலங்கன் விமான சேவை ஒரு வருட காலப் பகுதியில் 4400 கோடி ரூபா நட்டமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஒரு வருட காலப்பகுதியில் இந்த நட்டம் ஏற்பட்டுள்ளது.

சிறிலங்கன் விமான சேவையின் வருடாந்த கணக்காய்வு அறிக்கையைச் சமர்ப்பித்து, கணக்காய்வாளரான டபிள்யு.பீ.சீ. விக்ரமரத்ன இதனைக் கூறினார்.

சிறிலங்கன் விமான சேவைக்கு இதுவரை 23 ஆயிரம் கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நட்டம் ஏற்பட்டுள்ளமை காரணமாக, சிறிலங்கன் விமான சேவையை முன்கொண்டு செல்வதில் நிச்சயமற்றதன்மை ஏற்படக்கூடும் எனக் கணக்காய்வாளரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## அரிசி விலை குறையும்

சந்தையில் அரிசி விலையை கட்டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை குறித்து கமநல அமைச்சர் சமல் ராஜபக்ஷ அமைச்சரவைக்கு அறிவித்திருக்கின்றார் என அமைச்சரவையின் ஊடகப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

நெல் அறுவடை நெருங்கும் வேளையில் அரிசிக்கு தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்குச் சிலர் முயற்சிக்கின்றனர்.

எனவே அரசின் கையிருப்பில் உள்ள நெல்லை சிறு அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கி அரிசியாக்கிச் சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றார்.

## வேட்பாளர் கட்டுப்பணத்தை அதிகரிப்பதற்கு தீர்மானம்!

தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களுக்கான கட்டுப்பணத்தை அதிகரிப்பது குறித்து திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் சட்டப்பிரிவுப் பணிப்பாளர் நிமல் புஞ்சிஹேவா இதனைத் தெரிவித்துள்ளார்.


தேர்தலில் அதிக வேட்பாளர்கள் போட்டியிட முன்வருகின்றமையைக் குறைக்கும் நோக்கில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்புவோர் கட்சி சார்பில் பிரேரிக்கப்படும் பட்சத்தில் 25 இலட்சம் ரூபா கட்டுப்பணமும் சுயேச்சை வேட்பாளராயின் 30 இலட்சம் ரூபா கட்டுப்பணமும் செலுத்தும் வகையில் புதிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

10 வருடங்களுக்கு மேல் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாயின் முன்வைக்கப்பட்டுள்ள கட்டுப்பணத்தில் நான்கில் ஒருபங்கை செலுத்துவது போதுமானதாக அமையும் எனவும் அவர் கூறியுள்ளார்.

புதிய திட்டத்துக்கு அமைய பொதுத் தேர்தலில் போட்டியிட விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வேட்பாளர் 5,000 ரூபா கட்டுப்பணம் செலுத்தப்படவேண்டும் எனவும், சுயேச்சை வேட்பாளர் 7,500 ரூபா கட்டுப்பணம் செலுத்த வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)




வடமாகாண
மரநடுகை மாதம்
கார்த்திகை 1 - 30
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல,
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

# யாழ்.மாநகர சபை பட்ஜெட்டை எதற்காக நாங்கள் எதிர்த்தோம்?

## ஈ.பி.டி.பி. விளக்கம்




யாழ்ப்பாணம், நவ. 29

யாழ்.மாநகரசபையின் வரவு – செலவுத் திட்டம் கற்பனையானது. வருமானமாக காண்பிக்கப்பட்டதன் பாதித் தொகை அரசினால் வழங்கப்படும் மானியங்களே. ஐ.தே.கவின் பிராந்தியக் கட்சியாகத் தமிழரசுக் கட்சி இருந்த கடந்த அரசே இவ்வளவு மானியம் வழங்காத நிலையில், இந்த ஆட்சியில் அவ்வளவு மானியங்கள் கிடைக்க வாய்ப்பேயில்லை. ஆடம்பர செலவுகளுக்கே அதிக பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனால்தான் தவறான வரவு – செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களித்தோம் எனத் தெரிவித்துள்ளது ஈ.பி.டி.பி.

யாழ். மாநகரசபையின் வரவு – செலவுத் திட்டத்தை ஈ.பி.டி.பி எதிர்த்து வாக்களித்திருந்தது. இது குறித்து ஈ.பி.டி.பியின் 10 உறுப்பினர்களும் நேற்று யாழ்ப்பாணத்தில் விளக்கமளித்தனர்.

இங்கு உரையாற்றிய மாநாகரசபை உறுப்பினர் மு.ரெமீடியஸ்–

கடந்த ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட வருமானம் வரவில்லை. அதைப் பெற நடவடிக்கையெடுக்கவில்லை. 35 வீதமான செலவீனங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

நகர கடைத்தொகுதிக் கடைகளின் உரிமங்களை மாற்றுவது தொடர்பாக கடந்த வரவு – செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டபோது அதை எதிர்த்தோம். அது சாத்தியமற்றது, வடக்கு மாகாணசபை அது பற்றிய நியதிச் சட்டங்களை உருவாக்காத நிலையில், அதைச் செய்ய மாநகரசபைக்கு அதிகாரமில்லையென்றோம். ஆனால், உரிமமாற்றத்தின் மூலம் 13 கோடி வருமானமெனக் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால் அது நடக்கவில்லை.

இந்த வரவு – செலவுத் திட்டத்திலும் நடைறைச்சாத்தியமற்ற அதேயளவு தொகையை – 13 கோடி ரூபா – வருமானமாகக் குறிப்பிட்டுள்ளனர். வடக்கு மாகாணசபை இல்லாத நிலையில், அதை செய்ய முடியாது. அப்படி செய்வது சட்டவிரோதமானது.

கடல் கடந்த பிரயாணச் செலவாக ஒரு கோடி ரூபா மக்கள் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. மக்கள் பணத்தில் இப்படி உலகம் சுற்ற வேண்டுமென்ற அவசியம் கிடையாது.

சோலைவரிக்கு கடந்த ஆண்டில் 4கோடி 64 லட்சத்து 23 ஆயிரத்து 329 ரூபா மதிப்பீடு செய்யப்பட்டு, 4 கோடியே 23 இலட்சத்து 69 ஆயிரத்து 290 ரூபா பெறப்பட்டுள்ளது. இந்த முறை மத்திய அரசே பல வரிச்சலுகைகளை அறிவித்துள்ள நிலையில், மாநகரசபை வரவு செலவு திட்டத்தில் சோலை வரி 3 மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. 12 கோடி 29 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாவாகக் குறிப்பிட்டுள்ளனர்.

120000 85 இலட்சத்து 93 ஆயிரம் ரூபா எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானமாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. அரசின் மானியங்களாக 61 கோடி 9 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது எதிர்பார்க்கப்படும் வருமானத்தில் அரை வாசிப்பணம் அரசின் மானியம். அரசாங்கம் வரி வருமா னங்களை குறைத்து, வரி வருமானமில்லாத நிலையில், அரசாங்கம் 61 கோடி ரூபாவை மாநகரசபைக்கு வழங்குமென கற்பனை கூட செய்ய முடியாது.

தற்போதைய முதல்வரின் கட்சி, ஐ.தே.க.வின் பிராந்தியக் கட்சியாகத்தான் செயற்பட்டது. பிராந்திய கட்சியாக செயற்பட்டபோதே, ஐ.தே.க. அரசிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட வருமானங்களை அவர்களால் பெற முடியவில்லை. ஆட்சி மாற்றம் நடந்துள்ள நிலையில், எதிர்பார்க்கப்பட்ட வருமானங்களை எப்படி பெறப்போகிறார்கள் என்ற கேள்வியுள்ளது.

மாநகரசபை எதிர்பார்க்கும் வருமானத்தில் 55, 60 வீதமானவை கற்பனையானவை, எதிர்பார்க்க முடியாதவை.

கடந்த வரவு – செலவுத் திட்டத்தின் செலவீனங்களையே சரியாகச் செய்யாத நிலையிலும், தற்போது மாநகரசபையில் செலவிட பணமில்லையெனக் குறிப்பிட்டு மாநரசபை நிலையான வைப்பில் இருந்து 10 கோடி ரூபா பெற முதல்வர் கடந்த அமர்வில் ஒப்புதல் கேட்டிருந்தார். அதற்கு அனுமதியளிக்கப்பட்டது. கடந்த முறை செலவீனங்கள் சரியாகச் செய்யாமலேயே, மாந கரசபையிடம் நிதி இருக்கவில்லை. கடந்த அரசின் பிராந்தியக் கட்சியாக இருந்தபோதும், அரசிடமிருந்தும், ஆளுநரிடமிருந்தும் அந்தப் பணத்தைப் பெற முடியவில்லை. ஆட்சி மாற்றத்தின் பின் எவ்வாறு இந்த வருமானத்தைப் பெறுவார்கள்?

மாநரசபையின் செயற்பாடு ஜனநாயக விரோதமானது. மாநகரசபையின் 45 உறுப்பினர்களில் ஈ.பி.டி.பி., சு.க. தரப்பில் 12 உறுப்பினர்கள் உள்ளோம். கிட்டத்தட்ட 30 வீதத்துக்கு அண்மித்த தொகை. ஆனால், 2 பேருக்கு மட்டுமே வட்டார அபிவிருத்தியில் பணம் ஒதுக்கப்படுகிறது. அபிவிருத்தித் திட்டங்களில் 5, 6 வீதமான பங்கே எமக்கு ஒதுக்கப்படுகிறது.

கற்பனையான வரவு செலவு திட்டமாக இது இருப்பதால் இதை எதிர்க்கிறோம் – என்றார். (ஐ)

# பஸில் ராஜபக்ஷ வெளிநாடு செல்ல நீதிமன்றம் அனுமதி

கொழும்பு, நவ. 29

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வெளிநாடு செல்வதற்கு விடுக்கப்பட்டிருந்த தடையை கொழும்பு மேல் நீதிமன்றம் தளர்த்தியுள்ளது.



கடந்த 2015 ஆம் ஆண்டு திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்துக்குச் சொந்தமான இரண்டு கோடியே 94 இலட்சம் ரூபா நிதியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நிழற்படம் அடங்கிய 50 லட்சம் கலண்டர்களை அச்சிட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று வியாழக்கிழமை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது மருத்துவ சிகிச்சையைப் பெற்றுக் கொள்வதற்காக வெளிநாடு செல்லவேண்டும் என்பதனால் அனுமதி வழங்குமாறு பஸில் ராஜபக்ஷ தரப்பு மன்றில் கோரிக்கை வைத்தது.

அந்த சமர்ப்பணத்தை ஆராய்ந்த நீதிபதி டிசெம்பர் 5 முதல் 2020 மார்ச் 7 வரை அவருக்கு விதிக்கப்பட்ட பயணத் தடையை நீக்கி உத்தரவு பிறப்பித்தார்.

அத்தோடு இந்த வழக்கை மீண்டும் எதிர்வரும் மார்ச் மாதம் 30 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாகவும் நீதவான் அறிவித்தார்.

இதேவேளை, கொழும்பு மேல் நீதிமன்றத்தின் நீதிபதி கிஹான் குலதுங்க முன்னிலையில் தனக்கு எதிரான திவிநெகும விவகார வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளக்கூடாது என கோரி முன்னாள் அமைச்சர் பஸில் தாக்கல் செய்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

# தூதரக அதிகாரி கடத்தல் குறித்து தீவிர விசாரணையில் பொலிஸார்

கொழும்பு, நவ. 29

சுவிற்சர்லாந்து நாட்டின் இலங்கைக்கான தூதரக அதிகாரி ஒருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸாரும், குற்றப் புலனாய்வுத் திணைக்களமும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

இந்த விசாரணைகளுக்கு சுவிஸ் தூதரகம் முழு ஒத்துழைப்பையும் வழங்குமென எதிர்பார்ப்பதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். (ஐ)

# அரச நிறுவனங்களின் தலைவர்களை தெரிவு செய்ய அறுவர் குழு நியமனம்

கொழும்பு, நவ. 29

அரசநியதிச்சட்டசபைகள்,கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான வணிக நிறுவனங்களுக்கு திறமையும் தகைமையும் கொண்டவர்களை நியமிப்பது தொடர்பான பரிந்துரைகளை முன்வைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் ஜனாதிபதி செயலகத்தால் ஆறு தொழில் வல்லுநர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சரவையின் செயலாளரும் அரச துறை பற்றிய விரிவான அனுபவங்களைக் கொண்டவருமான மூத்த அரச அதிகாரி சுமித் அபேசிங்கவின் தலைமையிலான இந்தக் குழுவில் பிரசன்ன ரத்நாயக்க, கலாநிதி நாலக்க கொடஹேவா, டயன் கோமஸ், கலாநிதி பிரசன்ன குணசேன மற்றும் பேராசிரியர் ஜகத் வெல்லவத்த ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

தகைமை வாய்ந்த தொழில் வல்லுநர்கள் தொடர்பான பரிந்துரையை 2019 டிசெம்பர் 18ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி செயலகம் இந்தக் குழுவுக்கு அறிவித்துள்ளது. (ஐ)

# பாதசாரிக் கடவைகளை பயன்படுத்தாத நபர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்

பாதசாரிக் கடவையை பயன்படுத்தாமல் வீதியைக் கடக்க முயலும் பாதசாரிகளுக்கு எதிராக சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்த பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

இதற்கு அமைவாக பாதசாரி கடவையைப் பயன்படுத்தாது வீதியின் குறுக்காகப் பயணிக்கும் பாதசாரிகளை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். தற்பொழுது பாதசாரிகளுக்கு வீதிக் கடவைகளை பயன்படுத்துவதற்கான ஆலோசனை வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படும் என்று வீதி பாதுகாப்பு மற்றும் மோட்டார் வாகனப் பிரிவு பொறுப்பு அதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் எஸ் பத்திநாயக்க தெரிவித்துள்ளார். (ஐ)

# கரவெட்டிப் பிரதேச சபையின் பட்ஜெட் நேற்று நிறைவேறியது

யாழ்ப்பாணம், நவ. 29

கரவெட்டி பிரதேச சபையின் 2020ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கரவெட்டி பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் நேற்று வியாழக்கிழமை சபையின் தவிசாளார் தங்க வேலாயுதம் ஐங்கரனால் முன் மொழியப்பட்டது.

15 கோடி ரூபா எதிர்பார்க்கப்படும் வருமானாகக் காட்டப்பட்டுள்ளது.

செலவுகளில் வீதி அமைப்புக்கு 2 கோடி ரூபாவும், வீதி அபிவிருத்திக்கு 3.5 கோடி ரூபா வும், வீதி பராமரிப்பு, வாகனங்கள் கொள்வனவு செய்ய 4 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் விடுதலைக்கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 21 உறுப்பினர்கள் சபை அமர்வில் பங்கேற்றிருந்தனர்.

ஈ.பி.டி.பி. மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அமர்வுக்குச் சமுகமளிக்கவில்லை.

சமூகமளித்த 21 உறுப்பினர்களும் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

அதனால் சபையின் ஏகமனதாக வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.11.2019 இல் வெளியிடப்பெற்றது.